Registered as a Newspaper in Sri Lanka


صوت المسلم

# முஸ்லிம் குரல்

මුස්ලිම් කුරල් MUSLIM KURAL

'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

தருகை -20 ரூபா | 12 நவம்பர் 2004 வெள்ளிக்கிழமை 28 ரமழான் 1425 சுவடு - 56




# விடுதலைப் புலிகள் தனிநாட்டைக் கைவிடவில்லை! ஒஸ்லோ உடன்படிக்கையை புலிகள் நிராகரிப்பு!!

(நமது அரசியல் செய்தியாளர்)

**ஒஸ்லோ உடன்படிக்கை விடுதலைப் புலிகளை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என அண்மையில் அறிவித்திருப்பது தென்னிலங்கை அரசியல் அரங்கில் நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் விடுதலைப்புலிகள் 'தனிநாட்டுக்கான' தமது இலட்சியத்தை கைவிட்டு விடவில்லை என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.**



ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் தன்னாதிக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் சமஷ்டி அரசியல் ஏற்பாட்டிற்கு உடன்படத் தயாராக புலிகள் இருக்கின்றனர் என்பதே அவ் உடன்படிக்கையின் தொனிப்பொருளாகும். அந்த அடிப்படையை எட்டுவதே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையின் இலக்கு என இலங்கை அரசாங்கம் சொல்லிவந்தது. அது ரணிலாக இருக்கட்டும், சந்திரிகாவாக இருக்கட்டும் இதுவே அவர்களின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை வடக்குக் கிழக்குப் பிரதேசம் தனிநாடாக மாற்றப்படல் வேண்டுமென்பதே அதன் இறுதி இலக்காக உள்ளது. புலிகளின் தலைமை அக.வெளி சுயநிர்ணயம் பற்றிய நிலைப்பாடில மிகத் தெளிவாக உள்ளது. நடைபெறும் பேச்சுவார்த்தையானது உடனடியாக இடைக்கால சபைக்கானதாகவும்; அதுவும் விடுதலைப் புலிகளின் தன்னாட்சி யோசனையின் அடிப்படையிலேயே நடாத்தப்படவேண்டுமெனவும் கோரிவருகிறது. இதற்கு எந்த விட்டுக் கொடுப்புகளையும் செய்யமுடியாதெனவும் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இத்தகைய அரசியல் அறிவிப்பானது நமது அரசியல் தலைமைகளை எந்தவிதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை. இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து மேலும் எத்தனை அமைச்சுக்களையும்; எத்தனை பதவிகளையும் பெறலாமென்ற வகையிலேயே நிலைமைகள் உள்ளது. இன்னும் இடைக்கால சபை தொடர்பான முஸ்லிம் யோசனைகளைக்கூட முஸ்லிம் அரசியல் தலைமைகள் முன்வைக்கவில்லை. அத்தகைய பணியை ஒரு பொறுப்புவாய்ந்த செயற்பாடென கருதி உள்ளதாகவும் தெரியவில்லை.

## ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி! முஸ்லிம்கள் இதுபற்றி என்ன நினைக்கிறார்கள்?

உண்மையில்: விடுதலைப்புலிகளின் இந்த அறிவிப்புடன்தான் வடக்குக்கிழக்கு வாழ் முஸ்லிம்களின் அரசியல் சமூக இருப்பும் பிண்ணிப்பிணைந்துள்ளது. இது பற்றி நமது மக்களாவது எப்போது சிந்திக்கத் தொடங்குவர்? ■

## வாழைச்சேனை நகரில் கைக்குண்டுத் தாக்குதல்! முஸ்லிம் ஒருவர் காயம்!

திங்கட்கிழமை வாழைச்சேனை நகரில் வீசப்பட்ட கிரனைட் தாக்குதலால் முஸ்லிம் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இக்குண்டுத் தாக்குதலுக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென புலிகள் உடனடியாக மறுத்துள்ளனர். புனித ரமழான் தினத்தில் நடைபெற்ற இக் குண்டுத் தாக்குதலால் முஸ்லிம்கள் அச்சமடைந்துள்ளனர். முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முஸ்லிம் தலைமைகள் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்! கடந்த காலங்களைப் போல் நிலைமை மோசமடையாது பார்த்துக் கொள்தல் வேண்டும்!

## ரணிலை அநுரா வீழ்த்துவாரா?



ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தான்தானென அநுரா பண்டாரநாயக்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அந்த இடத்தினை வகிக்க முடியாதெனவும் அநுரா மறுத்துரைத்துள்ளார்! இவரின் இந்த அறிவிப்பானது உத்தியோக பூர்வமானதாக இல்லாவிட்டாலும்; நிலைமைகளை மதிப்பிடுவதற்கான ஒரு வெள்ளோட்டமென அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். இந்த அறிவிப்பின் பின்னால் ஜனாதிபதியின் பூரண ஆசிர்வாதம் உள்ளதென நம்பப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்: ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க என்பது உத்தியோகபூர்வமான அறிவிப்பாகும். ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அநுரா பண்டாரநாயக்காவின் பலம் மிகு எதிர் வேட்பாளராக ரணில் இருக்கப்போவது உறுதி! இந்நிலையில் அநுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை வீழ்த்துவதற்கு என்ன வியூகங்களை வைத்துள்ளார் என்பது எதிர்காலத்தில் அநுராவால் வெளிப்படுத்தப்படக் கூடும்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கினையும் அவர் போட்டியிலிருந்து ஒதுங்கிவிடுவார் எனவும் அநுரா எதிர்பார்க்கக் கூடாது! ஏனெனில் ஒருவேளை மகிந்த ராஜபக்ஷவே அநுராவை தோற்கடிப்பதற்கான சக்தியாக மாறக்கூடும்;



கூட்டமைப்பிற்குள்ளும் கூட்டமைப்பிற்கு வெளியிலும் இது சாத்தியமானதே! அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005ம் ஆண்டிலா 2006ம் ஆண்டிலா என்கிற சர்ச்சை கொழும்பு அரசியல் வட்டாரத்தை இப்போது ஆக்கிரமித்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலை நோக்கியே பிரதான கட்சிகள் தயாராகி வருகின்றன. ஜே.வி.பி உட்பட; ■

## கட்சியிலிருந்து விலக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்துள்ளோம்! -மு.கா. தலைவர்!

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்திற்கு எதிராக செயற்பட்டதற்காகவும்; அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்றமைக்காவும் மு.கா.வின் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிசாட் பதியுதீன், நஜீப் ஏ. மஜீத், அமீரலி, உசைன் பைலா ஆகியோருக்கு எதிராக கட்சி உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக மு.கா தலைவர் தெரிவித்துள்ளார்.



இச்சட்ட நடவடிக்கை ஊடாக; இவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இல்லாதொழிக்க முடியும் எனவும் அவர் தெரிவிக்கின்றார். இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கையின் போது கடந்த காலத்தில் விட்ட தவறுபோல் இனி விடப்படாது எனவும் அவர் கூறுகிறார். இவர்களில் மூவரை ஏலவே கட்சியிலிருந்து விலக்கியது செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது கவனத்தில் கொள்ளத்தக்கது! ■



03 பலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கும் அரபாத்தின் மரணத்திற்குமிடையே!



05 இலங்கை முஸ்லிம்கள்.... சில கருத்துகளும் குறிப்புகளும்!



07 முஸ்லிம்களை இஸ்லாமியத் தமிழர்கள் என பச்சை குத்த முடியுமா?



13 முஸ்லிம்களின் போராட்டப்பாதை எது?

**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக் குரல்! சமூக சமத்துவத்திற்கான குரல்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தொடர்ந்தும் சமாதான முன்னெடுப்புகளை தாமதப்படுத்துகின்றனர்!

## -டக்ளஸ் -



சமாதான முன்னெடுப்புகள் தொடர்ந்தும் தாமதப்படுத்தப்படுவது புலிகளினாலேயே என்று ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளரும்; அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சிங்களவர் – தமிழர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த இந்தியாவினால் மட்டுமே முடியுமென்று தெரிவித்த அவர்; 1987ல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடிந்திருப்பினும் அதனை இருதரப்பினரும் நழுவவிட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமாதான முயற்சிகளில் இடையூறுகள் ஏற்படின் அதனை நிவர்த்திக்கும் முகமாக இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய அரசானது ஆதரவளிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த அவர்; ராஜிவ் காந்தியின் படுகொலை தொடர்பாக தான் தமிழர்கள் சார்பாக மன்னிப்பைக் கேட்டுக் கொள்வதாகவும்; அதனுடன் தொடர்புடையவர்களை ஒருபோதும் மன்னிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

## பெருநாளிலும் துயரங்கள்...

எங்கள், அன்பின் வாப்பாவே!
இதுவரை காலமும்
உங்கள் பற்றிய சேதி
இருளுக்குள்ளேயே
இருக்கிறது!

என்ன ஆச்சு உங்களுக்கு?
எங்கேயிருக்கிறீர்கள்?
உங்களன்பின் செல்வங்கள்
இருதம்பிகளும்; நானும்
உங்களை இழந்த
அந் நாட்களினை நினைத்து
வெம்பியழுது கண்ணீர்
வடிக்கின்றோம்!

தனிமையின் இரவுகளின்
நினைவுகளில் துளிர்த்த
கண்ணீர்த் துளிகளில்
ஒவ்வோர் இரவும்
நனைகிறது.... உம்மாவின்
பஞ்சுத் தலையணைகள்!

ஒவ்வோர் பெருநாட்கள்களிலும்
புது உடுப்பும், புதுச்சப்பாத்தும்,
வாங்கித் தரும் வாப்பா
இந்தப் பெருநாளில்
வாங்கித் தர நம்மிடம் இல்லையே
ஏங்கித் தவித்தழும்
எம் இளைய தம்பிக்கு
என்னவென்று நான்
ஆறுதல் சொல்ல!

இப்படியான எங்களின்
சோகங்களை
ஏனிந்த உலகு
இன்னும்
அறியாமல் இருக்கிறது?

2002 ஜூன் 27ந்திகதி வாகனேரிக்குச் சென்று மீளத் திரும்பாத தந்தையின் நினைவு குறித்த எமது கண்ணீர்!

ஜாவத்தமுனை ஜாபிர் எச்எம்.

## ஜனாதிபதிக்கெதிராக இலங்கை இராணுவத்திற்குள் சதித்திட்டம்!

இலங்கை இராணுவத்திலுள்ள சிரேஷ்ட அதிகாரிகளுக்கும், படையினருக்குமிடையில் ஜனாதிபதியினையும், அரசாங்கத்தினையும் வெறுப்புக்குள்ளாக்கும் நுண்ணிய வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக, வடக்கிலும் கிழக்கிலும் பணியாற்றும் மற்றும் அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் படை அதிகாரிகளும், படை வீரர்களுக்கிடையிலுமேயே இந்த வேலைத்திட்டமானது விரைவாக செயற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கடந்த ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் இராணுவத்திற்குள் நிகழ்ந்த முறைகேடுகள் குறைவானவை என உறுதிப்படுத்தும் விதத்திலான பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்காக ஐ.தே.க.வுக்கு ஆதரவான ஊடகங்களினது ஒத்துழைப்பினை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும், இராணுவத்தினர் மீது வெறுப்பும், அச்சமும் ஏற்படும் விதத்திலான உள் பிரச்சார நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவையனைத்தும் ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் உத்தரவின் பேரிலேயே நடைபெறுவதாக காட்டிக்கொள்வதற்கும்; ஜனாதிபதி மீது அதிருப்தியினை ஏற்படுத்துவதற்குமே தீய சக்திகள் இதனை மேற்கொள்வதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

## அரசாங்கம் இந்த வருடத்தில் 6000 கோடி பண நோட்டுக்களை அச்சடித்துள்ளது!

### -முன்னாள் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன-



இந்த வருடம் நவம்பர் மாதம் வரை UPFA அரசாங்கம் 6000 கோடி ரூபாய் (60 பில்லியன்) பண நோட்டுக்களை புதிதாக அச்சடித்துள்ளது என்று முன்னாள் பிரதி நிதியமைச்சரும்: கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இது அரசாங்கத்தின் வங்குரோத்து நிலையைக் காட்டுவதாகவும் அவர் குற்றம் சாட்டி உள்ளார்!



அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா பலஸ்தீன ஒத்துழைப்பு கமிட்டியின் வருடாந்தப் பொதுக் கூட்ட வைபவத்தில் கண்டி மத்திய தென்னகும்புர வை.எம்.எம்.ஏ. இயக்க ஆயுட்கால பொதுச் செயலாளர் ஏ.ஏ. மொஹமட் நாகூர்பிச்சை அவர்கள் மேற்படி கமிட்டியின் ஸ்தாபகத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்களை வாழ்த்துவதையும் அருகில் மேல் மாகாண ஆளுனர் அலவி மௌலானா, தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன, கமிட்டியின் பொதுச் செயலாளர் டாக்டர் டி. ஜயசிங்க ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## லொத்தர் விற்பனையும் முஸ்லிம் கிராமங்களும்!

இலங்கையின முஸ்லிம கிராமங்கள் பலவற்றில் வட்டியுடன் தொடர்பான தொழிலே பெரும்பாலும் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. வட்டியின் ஒரு வடிவமான லொத்தர் விற்பனையும் குறிப்பாக தற்போது நோன்பு காலங்களில் முஸ்லிம் கிராமங்களில் அமோகமாக விற்பனை செய்யப்படுகிறது. அந்நியச் சகோதரர்கள். முஸ்லிம்கள் எம் பகுதிக்குள் லொத்தர் டிக்கட்டுகளை கொண்டு வந்து விற்பனை செய்ய அதனை ஆண், பெண் என்ற இருபாலாரும் வாங்கி தங்களின் பொருளாதாரத்தை உயர்த்த முயற்சிக்கின்றனர். இதன் மூலமாக வீடு வாசல்களை இழந்த மக்களின் கதைகளும் வரலாறுகளில் உண்டு. ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களின் ஜமாஅத்தினர்களும் இதனை கவனத்தில் எடுத்து, குறைந்தபட்சம் இவ்விற்பனை ஊருக்குள் வராமல் பாதுகாப்பதோடு, இந்த ஹராத்தினை விட்டும் புனித றமழானில் மக்கள் விடுபட்டு ஹலாலான முறையில் தனது பொருளாதாரத்தினை ஈட்ட வழியமைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை ஈமானிய உள்ளங்கள் கேட்டுக் கொள்கின்றன.



எஸ். அஷ்ரஃப்கான், சாய்ந்தமருது.


## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்!

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகைகளை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாகச் சேருங்கள்! சகோதர, சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

பணத்தை காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசோலை அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publication and Printers எனக் குறிப்பிடவும். காசுக் கட்டளையாக இருப்பின் Muslim Kural Publication and Printers Slave Island Post office என அவசியமாகக் குறிப்பிடவும்.

சந்தா விபரம்:

3 மாதங்கள் – (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் – (24 இதழ்கள்) 500/-
1 வருடம் – (48 இதழ்கள்) 1000/-

(பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

தொடர்புகளுக்கு:
119/15, Viviyan Gunawardena,
Mawatha (Kettampahuwa Road)
Wellampitiya.
Phone :071-4105877


## பாதை புனரமைக்கப்படுமா?

திருகோணமலை சேருவிலத் தொகுதியிலே அதிகமாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு கிராமமாக கந்தளாய் திகழ்கின்றது. கந்தளாய் கிராமத்தின் ஜும்ஆப்பள்ளி, அல்–தாரிக் மகா வித்தியாலயம் என்பன இப்பாதையிலே அமைந்துள்ளன. தற்போது இப்பாதை குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இப்பாதையை புனரமைப்பதற்கு எந்த எம்.பிக்களும், அதிகாரிகளும் முயற்சி எடுக்கவில்லை. இப்பாதை எப்போது புனரமைக்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

(எம்.எப். முபாரக், கந்தளாய் செய்தியாளர்.)

## மூதூர் வைத்தியசாலையில் மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை...!

மூதூர் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட வைத்தியசாலையில் மக்கள் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றன. அதாவது இம்மாவட்ட வைத்தியசாலைப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களும், அயல் பிரதேசங்களில் (தோப்பூர். சம்பூர். சேனைவூர், இறால்குழி) வசிக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களும் இவ்வைத்தியசாலையை நம்பி உள்ளனர். இவ்வைத்திய சாலையில் போதிய மருந்துப் பொருட்கள் இல்லை. மேலும் இவ் வைத்தியசாலையில் வசதிப் பற்றாக்குறையால் சிகிச்சை அளிக்கப்படாது, அவசரச் சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது இடையில் பல மரணங்கள் ஏற்பட்டுள்ளது. இதனை கருத்திற் கொண்டு மூதூர் வைத்தியசாலையை பூரண வைத்தியசாலையாக மாற்ற உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

(மு.ம.மு. மஸாபிக் மூதூர்)




## வெள்ள அபாயம்!

பல நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதனால், கல்முனை மாநகருக்கு உட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு காணப்படுகின்றது. காரைதீவினூடாக அம்பாறை செல்லும் வழியில் அமைந்துள்ள பாலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு. நீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இதனால் இவ்வழியாகச் செல்கின்ற வாகனங்கள், பாதசாரிகள், பொதுமக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர். நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் இருக்கின்ற இப்பாலத்தை இனியாவது உரியவர்கள் கவனத்தில் எடுத்து புனரமைப்புச் செய்து எங்களின் துயர் நீங்க உதவி செய்வார்களா? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

(சாய்ந்தமருது செய்தியாளர்)

## அவல நிலையில் ஆர்.வீ.டீ.சி.!

இலங்கை தொழிற்பயிற்சி நிலையத்தின் பிரிவில் மாவட்ட தொழிற்பயிற்சி (RVTC) அலகுக்குட்பட்ட காரைதீவு கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தின் (RVTC) கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டு வருகின்றது. இக்கட்டிடத்திற்கு ஆரம்பத்தில் இடப்பட்ட கொங்கிறீட் சிதைவடைந்து சிறிது, சிறிதாக கீழே விழுவதால் இங்கு கல்வி கற்கும் பயிலுனர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இப்பயிற்சி நிலையத்தில் சுமார் 100ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கணனி, தச்சு, தோற்பொருள். மேசன் ஆகிய பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இங்கு கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு இடைவேளையில் உண்பதற்காக சிற்றுண்டிச்சாலை வசதியும் குறிப்பிடத்தக்கதாக இல்லை. இப்பயிற்சி நிலையம் காரைதீவு எம்.பி.சி.எஸ். கட்டிடத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. நமது நாட்டில் இப்படியான நிலையில் எத்தனையோ கல்லூரிகள் இயங்கிவருகின்றது. அரசாங்கமும் உரிய அதிகாரிகளும் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுப்பார்களா?

(எஸ்.எல்.எம். றாபி, நிந்தவூர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கும் அரபாத்தின் மரணத்திற்குமிடையே!

இக்கட்டுரை எழுதப் பட்டுக்கொண்டிருக்கும் நேரம்: பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராளியும்: விடுதலைப் போராளிகளுக்கு இருபதாம் நூற்றாண்டில் முன்மாதிரியாகக் காட்டப்பட்டவருமான அரபாத்: வாழ்வுக்கும் மரணத்திற்குமிடையே போராடிக் கொண்டிருக்கிறார்.

மிகக் கடுமையாக நோய் வாய்ப்பட்டுள்ள அவர்: பிரான்சிலுள்ள "க்ளைமார்ட்" இராணுவ மருத்துவமனையில் இப்போது கோமா நிலையிலுள்ளார். முழு உலகுமே பரபரப்பாக பார்த்துக்கொண்டிருக்கும் இப்போராளியின் வாழ்க்கை. இப்போது காஸாப் பள்ளத்தாக்கில் பெரும் கொந்தளிப்பையே தோற்றுவித்துள்ளது.

பலஸ்தீனத்தில் நிலைகொண்டுள்ள பல்வேறு போராளிக் குழுக்களிடையே அதிகாரம் தொடர்பான போட்டி நிலை உருவாகியுள்ளதாகத் தெரிகிறது. "தமது தலைவர் நோயுற்று வாழ்வுக்காகப் போராடும் இச்சந்தர்ப்பத்தில் பலஸ்தீன மக்களை நெருக்கடிக்குள் தள்ளவேண்டாமென போராளிகள் அமைப்புக்களிடம் பலஸ்தீனப் பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இறைவனின் நாட்டப்படி அரபாத் மரணித்துவிட்டால்; இஸ்ரேல் ஆக்கிரமிப்பு அரசு, ஜெருசலத்தில் பலஸ்தீனத் தலைவரின் உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்கப் போவதில்லையென தமது எதிர்ப்பினை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகிறது.

அரபாத்திற்குப் பின்னர் பலஸ்தீனத் தலைவர் யார் என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. இத்தகைய இடத்தை நிரப்புவதற்கு அங்கு பலத்த போட்டி நிலவுமென எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் ஹமாஸ் மற்றும் ஏனைய இயக்கங்களுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

பலஸ்தீனர்கள் தமது நாட்டினை இழந்ததன் காரணமாகவே அரபாத்துக்கும் அம்மக்களுக்கும் நாடொன்று இல்லாமல் போனது. அது தானாக நடைபெற்ற சம்பவமொன்றல்ல. 02ம் உலக யுத்தத்தின் பின்னர் யூதர்களுக்கு நாடொன்று பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காக மேலை நாடுகள் திட்டமிட்டு பலஸ்தீனத்தை ஆக்கிரமித்து இஸ்ரேலை உருவாக்கினர். அதன்பின்னர், யூதர்களினால் பலஸ்தீன மண் ஆக்கிரமிக்கப்பட்டது. இதன் காரணமாக 1948ல் அரேபிய இஸ்ரேலிய யுத்தம் மூண்டது. அப்போது அவ்யுத்தத்தில் அரபாத்தும் கலந்துகொண்டார். அவரது அயரா முயற்சி, அர்ப்பணிப்பு, பலமான ஆளுமை ஆகியவற்றின் காரணமாக குறுகிய காலத்துள் அவர் பலஸ்தீனர்களின் தலைவரானார்.

பலஸ்தீன போராட்டத்தில் அரபாத்தின் அத்தியாயம் முடிவடைந்து விட்டது. ஆனால், போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. பலஸ்தீனர்களின் விடுதலைக்காக அவர்கள் தொடர்ந்தும் போராடுவார்கள். அவர்களது போராட்டத்திற்கு தலைமை வகிப்பதற்கு அரபாத் இல்லாமல் போனாலும் இன்னும் பல தலைவர்கள் உருவாகுவார்கள். உருவாகி உள்ளார்கள். பலஸ்தீன மக்களின் போராட்டத்தினை தடுப்பதற்கு எவராலும் முடியப்போவதில்லை.

## பேச்சுவார்த்தை இல்லையெனில் நிதியுதவி கிடைக்காது!

இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிப்பது தாமதமானால் இலங்கைக்கு கிடைக்கவுள்ள நிதியுதவிகள் கிடைக்காமல் போகலாம் என ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையானது தாமதிக்கும் பட்சத்தில் அந்த நிதியுதவியானது வேறு நாடுகளுக்கு வழங்கப்பட வாய்ப்புள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிராந்தியப் பணிப்பாளரான அலெக்சாண்டர் பியோ தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்களின் சுமையினை நாடு தாங்காது!

**கொழும்பு பல்கலைக்கழக அரசியல் துறை பேராசிரியர்!**

நாட்டில் இருக்க வேண்டிய அமைச்சர்களின் எண்ணிக்கையினையிட்டு ஒரு தெளிவான கொள்கை அவசியமாகும். 1977க்கு முன் இந்த நாட்டில் சிறிய அமைச்சர் குழுவே இருந்தது. இப்போது நிலைமை படுமோசமாகப் போய்விட்டது. கடன் சுமையினால் தத்தளித்துக் கொண்டிருக்கும் வறிய நாடான நாம்: பெரிய அமைச்சர் குழுவொன்றினை பராமரிப்பது நமது தலையில் நாமே மண் அள்ளிப்போடும் ஒரு செயலாகும் என பேராசிரியர் மஹேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திலா அல்லது கூட்டமைப்பு அரசாங்கத்திலா அமைச்சர்கள் கூடுதலாக உள்ளனர் என்பது இங்கு முக்கியமல்ல: எம்மைப்போன்ற நாடொன்றில் அதிகளவு அமைச்சர்களைப் பராமரிப்பதற்கும் போசிப்பதற்கும் இயலுமா என்பதே முக்கியமானதாகுமென அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் காலங்களில் மட்டும்தானா வடமாகாண முஸ்லிம்கள் அணி திரள்வது?

வடபுல முஸ்லிம்களின் மனவியலபினையும், பறிக்கப்பட்ட தமது வாழ்வியல் உரிமையை மீட்டெடுப்பதன் பாலுள்ள கவனத்தினையும் அக்கறையையும் கடந்த வாரங்களில் வடமாகாண முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் பதினான்காவது ஆண்டு நிறைவினை குறிக்கு முகமாக மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டங்களின் ஸ்தம்பிதம் மிகத் தெளிவாக நமக்கு விளக்குகின்றன.

பதினான்கு வருடங்களாக தமது எல்லா சுதந்திரங்களும் உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் அல்லலுறுகின்ற நமது அகதி மக்கள் இத்தனை துன்பங்களின் பின்னரும் கூட, இன்னும் கிளர்ந்தெழுந்து தமது உரிமைப் போராட்டத்தினை முன்னகர்த்த முனையாமல் மௌனமாய் தம்மீது சுமத்தப்பட்ட அகதிவாழ்வினை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் ஏன் என்பது பற்றி விரிவாக ஆராயப்படல் வேண்டும்.

பொதுவாகவே இலங்கை முஸ்லிம்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற சமூக அநீதிகளின் மீதான மௌனத்தினை விட வடமாகாண முஸ்லிம்களின் மௌனம் பல வகைகளிலும் ஆபத்து நிறைந்தது. அத்தோடு இப்போராட்டங்களின் தோல்விகளும் பின்னடைவுகளும் வடமாகாண முஸ்லிம்களின் வாழ்வியல் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான செயலூக்கமிக்கதொரு தலைமைத்துவத்துக்கான தொரு வெற்றிடத்தையும் போராட்ட ஏற்பாடுகள், முன் தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்கான ஊழியர் படையொன்றுக்கான வெற்றிடத்தையும் பலமாக உணர்த்தி நிற்கிறது.

சுமார் ஒரு இலட்சம் அகதி மக்களில் ஆகக்குறைந்தது 5,000 மக்களை ஒரு பொதுத் தளத்தில், வருடத்துக்கொரு முறை எழுப்பப்படும் கோஷங்களுக்காக ஒன்றுதிரட்ட முடியாமல் போனமை தற்போதைய நமது அணுகுமுறைகளையும், விழிப்புணர்வினையும் கேள்விக்குட்படுத்துகிறது. ஏனெனில்; கடந்த பல வருடங்களாக போராட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுவது பற்றி அறிவிப்பதும் பிற்போடுவதும் வாடிக்கையாகிவிட்டது.



தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிய பிரச்சாரப் பணிகளும், செயற்பாடுகளும் முடங்கிவிட்டன. முஸ்லிம் அகதிகளிடையே இயங்குகின்ற அமைப்புக்கள் இத்தகைய மக்கள் போராட்டங்களை சிவில் சமூகமயப்படுத்தாமையினாலேயே தொடர்ந்தேர்ச்சியான மௌனமும், தயக்கமும் அகதிகள் மத்தியில் நிலவுகிறது.

இம்மௌனத்தை கலைப்பதன் ஊடாக அரசியல்வாதிகளின் தேர்தல் கால கூட்டங்களுக்கும், தேர்தல் கால கொடுப்பனவுகளுக்கும் மட்டுமே மக்கள் ஒன்று திரளும் நிலைமையிலிருந்து தமது உரிமைகளையும்: அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்காக தேசிய அளவிலும்: சர்வதேச அளவிலும் அழுத்தங்களை தெரிவிப்பதற்காக மக்கள் மயப்படுத்தப்பட்ட சிவில் சமூக போராட்டங்களின் பால் மக்கள் அணிதிரள்வதற்கான சூழலையும் சந்தர்ப் பத்தையும் நாம் ஏற்படுத்த முடியும். இதற்கான வழிமுறைகள், செயற்திட்டங்கள் பற்றி 'செயற்பாட்டாளர்கள்' நிறைய ஆராய்தல் வேண்டும். அனைத்து மக்களையும் விழிப்புணர்வுடன் ஒரே தளத்துக்கு ஒன்று திரட்ட சக்திகொண்ட தலைமைகளுக்கான வெற்றிடம், வாழ்வுரிமைக்கான போராட்டத்தினை வெறும் வாய்ச் சொற்களோடு, முடித்துக்கொள்ளுமளவிற்கு கொண்டுவந்து நிறுத்தியுள்ளது. சிவில் சமூக போராட்ட இயங்குநிலையினது கோமாத்தன்மைக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட தலைமைகளின் வெற்றிடமும் மிக முக்கிய காரணியாகும். இவை குறித்த சிந்தனைகளும் தீவிர செயற்பாடுகளும் இன்று நமக்கு அவசியமாகியுள்ளன.

எனவே, வடக்கு முஸ்லிம்களிடையே இயங்கும் ஆன்மீக, கல்வி, சமூக, கலாசார, அபிவிருத்தி, புனரமைப்பு, நலன்புரி போன்ற அனைத்துத்தளங்களிலும் செயற்படுகின்ற அமைப்புக்களை இணைத்து செயலூக்கம் கொண்ட ஒரு குழு, வெற்றிடமாகவுள்ள இத்தலைமைக்கு தயார்படுத்தப்படுவதுடன், ஏனைய அமைப்புக்கள், இயக்கங்கள் யாவும் மக்களிடையே நமது விடுதலைக்கான வழிமுறைகள் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வொன்றிணைந்த செயற்பாட்டு வழிமுறைகளினூடாகவே நமக்கான செயலூக்கமிக்க போராட்டத் தலைமையையும், விழிப்புணர்வுமிக்க மக்கள் கூட்டத்தையும் தயார்படுத்தி சிவில் சமூகப் போராட்டங்களை சரியான தளங்களில் மேற்கொள்ள முடியும்.

செயலூக்கம் கொண்ட ஒரு குழுவினர் பூரண ஆயத்தங்களுடன் சிவில் சமூகப் போராட்டத்தோடு தம்மை பிணைத்துக் கொள்வார்களாயின், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள தன்னார்வ சிவில் அமைப்புக்களின் உதவிகளையும் சர்வதேச ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம் வடமாகாண முஸ்லிம்களின் வாழ்வுரிமைக்கான போராட்டம் பலம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்களின் நிவாரணத்தில் அசட்டைத் தனம்!

வடபுலத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் அகதிகளின் நிவாரணக் கொடுப்பனவில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிவாரண முத்திரையின் இந்த ஆண்டு 6ம் மாதம் கிடைக்கப்பெற்ற நிவாரண பொருட்களைத் தவிர இன்னும் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.



தற்போது இருக்கும் அரசாங்கம் . இம்மக்களுக்கான கொடுப்பனவை 30 விகிதம் குறைக்க ஆலோசனை மேற்கொண்டு இருந்தது. இக்குறைப்பு காரணமாகவே இழுபறி நிலை ஏற்பட்டது. இந்த நிலை ஓரளவு மாறிவருகையில் கொடுப்பனவு முத்திரை வழங்கப்பட்டது. இதற்கான பொருட்களை உடன் மூன்று மாதங்களுக்கும் கொடுக்கும்படி பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் குறிப்பிட்ட அதிகாரிகளிற்கு உத்தர விட்டதுடன்; பத்திரிகையிலும் வானொலியிலும் அறிக்கை களுமிட்டார். ஆனால் இதுவரைக்கும் இந்நிவாரணம் மக்களுக்கு கிடைக்கவில்லை.

இதுபற்றி ப.நோ.கூ.சங்க அதிகாரிகளிடம் நோன்பு மாதத்திற்கு முன்னர் இம்மக்கள் கேட்டபோது, கண்டிப்பாக உங்களுக்கு நோன்புக்கு முன்னதாகவே தரலாம் எனச் சொல்லி இம்மக்களை ஏமாற்றியே வந்தனர். நோன்பும் முடியும் தருவாயும் ஆகிவிட்டது. இன்னும் இம்மக்களுக்குரிய உலர் உணவு பொருட்கள் கிடைப்பதாக தெரியவில்லை.

மக்கள் உங்களை நம்பித்தான் வாக்குப் போட்டு பாராளுமன்றம் அனுப்பிவைத்தனர். நீங்கள் பாராளுமன்றம் சென்றது சண்டைபிடிப்பதற்கு அல்ல; இம்மக்களின் குறைகளை தீர்த்து வைப்பதற்காகவே: இம்மக்களின் குறைகளை ஓரளவாவது தீர்த்துவையுங்கள். இப்போது நாம் இருந்து கொண்டிருப்பது நோன்பு மாதம். இம்மாதத்தில் இம்மக்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய நிவாரணப் பொருட்கள் 7ம் மாதம் தொடக்கம் இன்றுவரையில் வழங்கப்படாமல் இருக்கின்றது. இப்பொருட்களை நம்பி இம்மக்கள் எதிர்பார்த்து இன்று வரும் நாளை வரும் என எண்ணி எண்ணி நோன்பு இருக்கின்றனர். ஆனால் இதுவரைக்கும் கிடைத்ததாக இல்லை. பொருட்களின் விலை ஏற்றம்; கிடைக்கின்ற நிவாரணமும் கிடைக்கவில்லை. இப்படியான சூழ்நிலையில் மக்கள் என்ன செய்வார்கள், யாரிடம் போவார்கள் வறுமையிலும் வறுமையாக மக்கள் உள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களே, உரிய அதிகாரிகளே இது உங்களின் கவனத்திற்கு....

முல்லை மகன் - மதுரங்குளி

# தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்க உள்ளோம்!

## -தாதிமார் சங்கம் தெரிவிப்பு-

மேலதிக சேவையில் ஈடுபட்டுள்ள தாதிமாரினது கொடுப்பனவுகள் நவம்பர் 15ம் திகதிக்கு முன் வழங்கப்படாவிடில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அகில இலங்கை தாதிமார் சங்கம் தெரிவிக்கிறது.·

சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஆண் பெண் தாதிமாருக்குரிய மேலதிக கொடுப்பனவானது 06 மாத காலமாக வழங்கப்படாமல் உள்ளதாக தெரிவிக்கும் இந்த சங்கமானது தொடர்ந்தும் இந்த கொடுப்பனவானது வேண்டுமென்றே தாமதிக்கப்படுமானால் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# மறுமைக்காய் தயாராகு!



ஓ! இஸ்லாமிய சமூகமே
அகிலத்தின் அருளாளன்
அளவில்லா அன்புடையோன்
அல்லாஹ்வின் அடியானே!

இம்மை மறுமையின் விளைநிலம்
இயம்பிச் சென்றார் இறைத்தூதர்
இவ்வினிய வாழ்வை மறந்து - நீ
இச்சை வழி செல்கின்றாயே!

உத்தமரான உம்மி நபி
உருவெடுத்துக் காட்டிய
உருக்கமான வழியை விட்டு
உருவாக்கினாய்
புதிய பாதையை நீ....

மானிடத்தை படைத்த அல்லாஹ்
மரணத்தையும் படைத்துள்ளான்
மஃஷர் எனும் நிஜ வாழ்வை
மரணித்தே சுகிப்பாய் மனிதா!

கப்றறையின்
இருட்டுக்குகைக்குள்
இறைவன் உனக்கு
அழைப்பு விடுத்தால்
செய்வதென்ன நீ...

தப்பவும் முடியாது
தவறிடவும் முடியாது
தவிர்க்கத்தான் போகின்றாய்
இனியேனும் துனியாவை மறந்து
இறுதி நாளின் இரத்தினங்களைச் -
சுவைத்திட இன்றே விழித்தெழு.

ரிஸானா மிஹ்லார்
தல்கஸ்பிட்டிய

# தமிழர் அரசியல் போராட்டம் ஒரு வரலாற்றுத் தொடர்! 10

**இத்தொடர் தமிழர் அரசியலில் ஒரு முக்கியமான பதிவாகும்: தமிழர் அரசியல் போராட்டத்தின் பல்வேறு காலகட்டங்களையும் அதன் அரசியல் போக்கையும் நமக்கு மிகத் தெளிவாக முன்வைக்கிறது.**

**தமிழர் அரசியலில் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களின் பாத்திரம்: அவர்களின் பங்களிப்பு பலம் பலவீனங்களுக்கூடாகவும்: தீவிரவாத இயக்கங்களின் தோற்றத்தையும் நாம் அறிந்து கொள்ள இத்தொடர் நமக்கு அதிகளவில் துணைபுரியும்!**

**தமிழர் மிதவாத அரசியல் தலைமைகள் செய்த வரலாற்றுப் பாத்திரத்தையாவது நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்யவில்லை என்பதை இத்தொடரை வாசித்தறியும் போது நாம் கண்டு கொள்ளலாம்!**

நன்றி-ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்

**ஆகவே** கூட்டணியினர் தமது இளைஞர்கள் மூலமாக இந்த ஏற்பாடுகளைச் செய்தனர். நாமும் பலர் அதில் கலந்துகொண்டோம். கொழும்பிலிருந்து விமானமூலம் பலாலி விமானநிலையத்துக்கு வரும் தந்தை செல்வாவை வாகன ஊர்வலமாக பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, தெல்லிப்பளை, சுன்னாகம் வீதி வழியாக யாழ்ப்பாணம் முற்றவெளிக்கு அழைத்துச் சென்று அங்கே மாபெரும் வரவேற்புக்கூட்டம் நடத்துவதாகவும் அந்த மாபெரும் கூட்டத்தில் தந்தை செல்வாவுக்கு நான் இரத்தத்திலகம் வைத்து வரவேற்பதெனவும் முடிவெடுக்கப்பட்டு, பத்திரிகைகளிலும் இச்செய்தி வெளிவந்தது.

பெரியவர் செல்வாவின் பதவிதுறப்பு சம்பந்தமாக அவரது குடும்பத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டதை நான் அறிவேன். சாவகச்சேரி வி.என்.நவரத்தினத்தின் துணைவியார் போலவே, தந்தை செல்வநாயகத்தின் மனைவியும் கணவனின் கொள்கையுடன் ஒத்துப்போகாதவர். மிகவும் முரண்பாடானவர். தந்தை செல்வாவுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு இவர்கள் இருவரும் அரசியல் விடயங்களில் இருதுருவங்கள் என்பது நன்றாகத் தெரியும். தந்தை செல்வா அவர்கள் பதவிதுறக்கும் முடிவை அறிவித்த உடனேயே அவரது மனைவி அதைத்தடுக்க முயன்றார். அமிர்தலிங்கம் அவர்களுடன் தொடர்புகொண்டு தனது ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொண்டார். ஆனால் யாரும் அவருக்குச் சாதகமில்லாததனால், அவரால் ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட்டது. இப்பிரச்சினை நீண்ட காலமாகப் பெரும் தலையிடியாகச் செல்வநாயகத்துக்கு மட்டுமல்ல, தமிழர் கூட்டணியினருக்கும் இருக்கத்தான் செய்தது. ஒரு தலைவனுக்கு அவர் மனைவி கொள்கை ரீதியாக ஒத்துப்போகாவிட்டால் அது பெரும் தலையிடி என்பதற்கு இந்த இரண்டு குடும்பங்களும் உதாரணமாகும்.

திட்டமிட்டபடியே செல்வநாயகம் அவர்கள் தமது பதவியைத் தூக்கியெறிந்தார். அதன்பின்பு கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலிக்கு வந்த செல்வநாயகத்தை மக்கள் என்றுமில்லாதவாறு வரவேற்றனர். சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விமான நிலையத்தில் திரண்டிருந்தனர். சுமார் 50க்கு மேற்பட்ட வாகனங்கள் ஊர்வலத்துக்கென வந்திருந்தன. அத்துடன் துவிச்சக்கர வண்டியிலும் பெருந்தொகையானவர்கள் ஊர்வலத்தில் பங்குகொண்டனர். பலாலி விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம் யாழ்ப்பாணம் தமிழர் கூட்டணியின் காரியாலயத்துக்கு வந்தடைய சுமார் ஆறுமணி நேரம் வரை எடுத்துக் கொண்டது. வழிநெடுகிலும் ஊருக்கு ஊர் மக்கள் கூடி நின்று ஊர்வலத்தை மறித்து மாபெரும் வரவேற்புக் கொடுத்தனர். சில ஊர்களில் ஊர்வலத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் தாகசாந்தி கொடுத்தனர். மயிலிட்டி, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை, கொக்குவில் போன்ற இடங்களில் பந்தல்கள் போட்டு, மாபெரும் விழாபோல் வரவேற்பு அளிக்கப்பட்டது. மயிலிட்டியில் சிவனடியார், காங்கேசன்துறையில் சருணா னந்தசிவம், குமரகுரு, மாவிட்டபுரத்தில் சேனாதிராஜா, தெல்லிப்பளையில் கண்ணப்பர், கொக்குவிலில் தயாளன் போன்றவர்கள் முன்னின்று மாபெரும் வரவேற்பு ஏற்பாடுகள் செய்தனர். நானும் பத்மநாபாவும் திருநெல்வேலி தவராசாவும் வாடகைக்கு வாகனம் ஒன்று பிடித்து ஊர்வலத்தில் பங்குகொண்டோம். இந்த ஊர்வலம் மக்களிடையேயும் இளைஞர்களிடையேயும் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.



ஊர்வலம் யாழ்ப்பாணம் 2ம் குறுக்குவீதியில் அமைந்திருந்த தமிழர் கூட்டணிக் காரியாலயத்தை சென்றடைந்தது. திரண்டு வந்த மக்கள் கூட்டத்தாலும் வாகன நெரிசலாலும் யாழ்ப்பாணம் பிரதான வீதி, 2ம் குறுக்குவீதி, மற்றும் தேவாலயவீதி போன்ற வீதிகள் கர்ப்பிணிப் பெண்போல் முக்கி முனகித்திணறியது. கூட்டணிக்காரியாலயம் வந்தடைந்த தந்தை செல்வநாயகம் அவர்கள் வல்வெட்டித்துறை ஞானமூர்த்தி அப்பா அவர்களின் தலைமையில் வரவேற்கப்பட்டார். அன்று மாலை யாழ்ப்பாணம் முற்ற வெளியில் மாபெரும் வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. நான் அறிந்தமட்டில் வரலாறு காணாத மக்கள் கூட்டம் அங்கு கூடியிருந்தது. தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் கூட்டத்தில்கூட அவ்வளவு பெரும் திரளான மக்கள் கூடவில்லை.

**புஸ்பராஜா எழுதுவது...**

கூட்ட மேடைக்கு வந்த தந்தை செல்வநாயகம் அவர்களை, எனது கையின் சதையைக் கிழித்து அதில் வந்த இரத்தத்தினால் பொட்டுவைத்து வரவேற்றேன். அதன் பின்பு அங்கு பல தலைவர்கள் தந்தை செல்வாவின் செயலைப் பாராட்டிப்பேசினர்.

## தமிழ் இளைஞர் பேரவையின் தோற்றம்

யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத்தெரு தமிழர் கூட்டணிக் காரியாலயத்துக்கு, என்னைப்போல் அடிக்கடி வந்து போகும் பிரான்ஸிசுக்கும் எனக்குமிடையே நெருக்கம் ஏற்பட்டது. இரண்டு பேரும் சேர்ந்து வரலாறுகள் பற்றிப் பேசுவோம், அரசியல் பற்றிப் பேசுவோம், இலக்கியம் பற்றித் தர்க்கிப்போம், மார்க்ஸ், லெனின் தொடக்கம் ஜெயகாந்தன்வரை எமது நேரம் போவது தெரியாமல் செலவிடுவோம். (இன்னும் வரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்கள்.... சில கருத்துகளும் குறிப்புகளும்!

**16ம்** நூற்றாண்டு தொடக்கம் - போர்த்துக்கீசர். ஒல்லாந்தர். ஆங்கிலேயர் என படையெடுப்புக்கும் அரசியல் ஆதிக்கத்திற்கும் உட்பட்ட இலங்கை: 1948ம் ஆண்டு இறைமையுள்ள நாடாக சுதந்திரம் பெற்றது. 16ம் நூற்றாண்டுக்கு முன்பும்: அதன் பின்பும் பல்வேறு பிராந்தியங்களாக வெவ்வேறு சுதேச, விதேச மன்னர்களாலும் இலங்கை ஆட்சி செய்யப்பட்டது.

வாணிபம், படையெடுப்பு. மதரீதியான பிரச்சாரம். திருமணத் தொடர்பு என பல்வேறு வழிகளில் இலங்கை மக்கள் வெளிச்சக்திகளின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்துள்ளனர். இலங்கையினுடைய இனத்துவ சமூக வரலாற்றில். இலங்கை முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகால உரித்துடையோர் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகியுள்ளது.

சிங்கள மக்களுடைய வரலாற்றைப் பொறுத்தவரை மகாவம்சம், சூலவம்சம், ராஜவலிய போன்ற வரலாற்று இதிகாச நூல்கள் உள்ளன. தமிழ் மக்களுடைய வரலாற்றை அறிவதற்கு யாழ்ப்பாண வைபவமாலை பிரதானமாக உள்ளது. இவைதவிர 19ம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட வரலாறுகளும் உள்ளன. இத்தகைய வரலாறுகள் எழுதப்பட்டதன் நோக்கம் "அரசியல் இருப்பு அதிகாரம்" தொடர்பான வரலாற்றுத் தேவை என்பதை நாம் அறிவோம்.

உலக முஸ்லிம்களுடைய வரலாற்றில் படையெடுப்பு. யுத்தம், நாடுகளை அதிகாரத்தின் கீழ் கொண்டுவருதல் என்பன பல்வேறு தடவைகளில் நிகழ்ந்துள்ளன. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில். இலங்கையில் முஸ்லிம்களின் இருப்பும், வருகையும் இத்தகைய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதை வரலாற்றை வாசித்தறியும்போது நாம் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

"தொடர்ச்சியான சிங்கள மேலாதிக்கமும், அந்த மேலாதிக்கத்தை முறியடிக்கக் கிளர்ந்த தமிழர் ஆயுதப் போராட்டமும் இன்று இலங்கை வாழ் முஸ்லிம்களை இருமுனை அடக்குமுறையாக நிலைபெற்று நசுக்குகிறது."

இலங்கை முஸ்லிம்களுடைய வருகையும் வாழ்வும் வாணிபம், திருமணத் தொடர்பு. மதரீதியான பிரச்சாரம் என்பனவற்றை அடிப்டையாகக் கொண்டே இருந்துள்ளது. இதன் காரணமாகவே இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக இத்தகைய வரலாற்று ஆய்வுகள்; முஸ்லிம்களால் அரசியல் நோக்கங்களுக்காக எழுதப்படவில்லை என நம்புகிறோம். ஆனாலும் 7ம் நூற்றாண்டில் இருந்து இலங்கை முஸ்லிம்களையும் உள்ளடக்கிய வரலாற்றினை இலங்கை கொண்டிருந்ததை நாம் ஏனைய வரலாற்றாசிரியர்களின் குறிப்புகளில் இருந்து ஆதாரபூர்வமாகக் காணலாம்.

மிக மோசமாக போர்த்துக்கீசர்களால் நசுக்கப்பட்ட முஸ்லிம்கள்; போர்த்துக்கீசருடைய வரலாற்றுக்குறிப்புகளிலேயே தவிர்க்கமுடியாத பதிவுக்குள்ளாகியுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் பிரசன்னம் ஆதிக்க எதிர்த்தரப்புக்குக்கூட மூடி மறைக்கமுடியாத விசயமாகியுள்ளது இங்கு அவதானிக்கத்தக்கது.

போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்பும் (1505ம் ஆண்டு) இலங்கையை ஆண்ட சுதேச, விதேச மன்னர்களின் அரசாட்சியிலும்: அதன் நிருவாகத்திலும் முஸ்லிம்கள் முக்கிய பங்கினை ஆற்றி வந்துள்ளனர். பல்வேறு பிராந்தியங்களாக இலங்கை குறுநில மன்னர்களால் ஆளப்பட்டபோது அவ்வப்பிராந்தியங்களில் முஸ்லிம்களின் ஒத்துழைப்பும். ஆதரவும் இம் மன்னர்களுக்கு கிடைத்து வந்திருக்கிறது. இத்தகைய ஆட்சிகளில் முஸ்லிம்களுக்கு முக்கியத்துவமும், புறக்கணிப்புகளும் நடந்துள்ளன.

பிரிட்டிஷாரின் காலனித்துவ ஆட்சியின் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் இலங்கை மக்களிடையே பல்வேறு விழிப்புணர்ச்சிகளை தோற்றுவித்தன. சுதேச மக்களின் சுயத்தை நிலை நிறுத்துவதற்கான ஆர்வமும். இந்தியாவின் சுதந்திரப் போராட்டமும்; கல்வி, பொருளாதாரம். பண்பாட்டுத் தனித்துவத்தின் அடிப்படையில் எழுந்த உணர்வுகளும் பிரிட்டிஷாரின் காலனித்துவ ஆட்சியை இலங்கையில் பெருமளவில் நீங்கச் செய்தன.

இலங்கையின் சட்டவாக்க நிரூபண சபையின் தோற்றத்துடன். முஸ்லிம்கள் தங்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கோரத்தொடங்குகின்றனர். இத்தகைய அரசியல் கோரிக்கைக்குப் பின்னால் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களின் இருப்புத் தொடர்பானதும். தனித்துவம் தொடர்பானதுமான உணர்வு அடையாளப்படுத்தப்படுகிறது என்பதை நாம் அறிவோம்.

1833 சட்ட நிரூபன சபை தொடக்கம். டொனமூர் அரசியல் ஏற்பாடு வரையும்: இப்போதைய இலங்கையின் நாடாளுமன்றம் வரை முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் வலியுறுத்தப்பட்டு வருகிறது. முஸ்லிம்களின் இத்தகைய அரசியல் பிரதிநிதித்துவ. அரசியல் அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கைகளை நிராகரிக்கும் வகையில் பல்வேறு ஆதிக்கக் கருத்துக்கள் தொடர்ந்தும் ஆதிக்க சக்திகளினால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் நாடாளுமன்றத்தை மையப்படுத்திய இத்தகைய அரசியல் பிரதிநிதித்துவங்களின் ஊடாக இலங்கை வாழ் முஸ்லிம்களின் நியாயமான சமூக அரசியல் உணர்வுகள் பிரதிபலிக்கப்பட்டுள்ளதா என்கிற கேள்விக்கு திருப்திகரமான பதில் இதுவரை இல்லை. சுதந்திரத்தின் பிற்பட்ட இலங்கையின் மக்கள் ஆட்சி அரசியல் அமைப்பு ஏற்பாடுகள் இலங்கை வாழ் முஸ்லிம்களின் அரசியல். சமூக. பண்பாட்டு. பொருளாதார அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதில் இருந்து தவறியே வந்துள்ளன.

இலங்கை முஸ்லிம்கள் இலங்கை நாட்டின் 26 நிர்வாக மாவட்டங்களிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்களின் இத்தகைய பரந்த இருப்பானது இலங்கை பூராகவும் முஸ்லிம்களின் நியாயமான வாழிட சமூக உரிமையை பறைசாற்றி நிற்கிறது.

வாணிப. விவசாய. சமூக அமைப்பாக நிலைபெற்று வாழ்ந்த முஸ்லிம்களை திட்டமிட்ட வகையில் ஆதிக்க நோக்கில் இத்துறைகளில் இருந்து அகற்றிவிட பல்வேறு முயற்சிகள் அரசியல் பின்புலத்துடன் எடுக்கப்பட்டு வந்துள்ளன. இலங்கையின் வர்த்தகப் பொருளாதாரத் துறையில் நிலைபெற்ற முஸ்லிம்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கணிசமான அளவு வெற்றியையும் ஆதிக்கத் தரப்புகளுக்கு தந்துள்ளது. இந்நிலைமை இன்னும் தொடர்கிறது.

இதேபோல் கல்வி. தொழில்வாய்ப்பு. காணி, வளப்பங்கீடு போன்ற அத்தியாவசியத் துறைகளில் முஸ்லிம்கள் கணிசமாக பாதிப்படைய வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய செயற்பாடுகளால் முஸ்லிம்களை இலங்கையின் மைய அரசியல். சமூக வரலாற்றில் இருந்து நீக்கச் செய்யும் பிரதான நோக்கமுள்ளதை முஸ்லிம்கள் அறிந்து வைத்துமுள்ளனர். இன.மத அடிப்படையில் முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியான அடக்குமுறைகளையும் புறக்கணிப்புகளையும் கட்டவிழ்த்துவிடும் இத்தகைய போக்கை நாம் இலங்கை வரலாற்றில் தொடர்ச்சியாகக் காணலாம். இதுவே வரலாற்றின் சாட்சியமாகவும் நமக்கு உள்ளது.

## சமகால நிலைமை

இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் மீதான அடக்குமுறையானது வரலாற்றின் அடிப்படையில் இருவேறுபட்ட அடக்குமுறை அதிகாரத்தினுள் முஸ்லிம்களை முற்றுகைப்படுத்தியுள்ளது. ஒரே நேரத்தில் இரு ஆதிக்க அடக்குமுறையை எதிர்கொள்ளும் பலத்த சவாலை முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ளனர். இதனை முஸ்லிம்களும். சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ளவேண்டும்.

தொடர்ச்சியான சிங்கள மேலாதிக்கமும். அந்த மேலாதிக்கத்தை முறியடிக்கக் கிளர்ந்த தமிழர் ஆயுதப் போராட்டமும் இன்று இலங்கை வாழ் முஸ்லிம்களை இருமுனை அடக்குமுறையாக நிலைபெற்று நசுக்குகிறது. நீண்டகாலமாக தமிழ் மக்கள் மீதான சிங்கள அரசின் அடக்கு முறையை தமிழ் மக்களுக்கு சமாந்திரமாக எதிர்கொண்ட முஸ்லிம்கள். இன்று சிங்கள தமிழ் மேலாதிக்கத்தை எதிர்கொள்ளவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பலத்த சவாலை முஸ்லிம்கள் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எப்படி எதிர்கொள்ளப் போகின்றனர் என்பது பிரதான கேள்வியாகும்.

சிங்கள, தமிழ் அடக்குமுறை அதிகார எல்லையின் அதன் தாக்கத்தின் காரணமாய் இலங்கை வாழ் முஸ்லிம்கள் தென்னிலங்கை முஸ்லிம்கள். வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் என வகைப்படுத்தப்படுவது தவிர்க்கமுடியாததாகியுள்ளது. ஒரே தேசிய அடையாளத்தின் பாற்பட்ட ஒரு இன மக்களை இரு வேறுபட்ட பிரிவுகளாக மாற்றும் இத்தகைய யதார்த்த தன்மையும் முஸ்லிம்களை மேலும் பலவீனப்படுத்தியே உள்ளது.



இலங்கை முஸ்லிம்களின் மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பிரிவினர் தென்னிலங்கையிலும். மூன்றில் ஒரு பிரிவினர் வடக்குக் கிழக்கிலும் பரந்து வாழ்கின்றனர். இத்தகைய மூன்றில் ஒரு பிரிவினர் வாழும் தாயகப் பிரதேசத்தை உள்ளடக்கியும்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் தனி அரசைக் கோருகின்றனர்: அல்லது தனித்த அதிகார மையத்தை கோருகின்றனர்.

1980ற்குப் பின் தோற்றம் கொண்ட தமிழர் விடுதலைப் போராட்டம் வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களை கணிசமான அளவில் அகப்புறத்தாக்கத்திற்கு உட்படுத்தியுள்ளது. கணிசமான உயிரிழப்பு சொத்திழப்பை முஸ்லிம்கள் சந்தித்துள்ளனர். இனப்படுகொலை தொடக்கம் இனச்சுத்திகரிப்பு வரை வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. வாழ்வின் மீதான அச்சுறுத்தல் வடக்கு கிழக்கு முஸ்லிம்களை சதா அச்சுறுத்துகின்றது.

தென்னிலங்கை முஸ்லிம்கள் மிக மோசமான அச்சுறுத்தலையும். பாதுகாப்பின்மையையும் பல்வேறு தடவைகள் சந்தித்து வருகின்றனர். வாழ்வின் அடிப்படை அத்தியாவசியத் துறைகளில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தென்னிலங்கையில் தாக்கம் செலுத்தி வந்த பல்வேறு துறைகளில் இருந்து முஸ்லிம்கள் அகற்றப்பட்டு வருகின்றனர். திறந்த பொருளாதாரக் கொள்கையும். அரசின் திட்டமிட்ட பாகுபாடுகளும். நாட்டில் மேலோங்கி நிற்கும் இனவாத சிந்தனைச் செயற்பாடுகளும். திட்டமிட்ட குடியேற்றங்களும் முஸ்லிம்களை மோசமாகப் பாதித்து வருகிறது.

முஸ்லிம்களுடைய வருவாய் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதில் இன்று பிரதானமாக தங்கி நிற்கும் நிலைக்கு வந்துள்ளது. முஸ்லிம் பெண்கள் வீட்டுப்பணிப்பெண்களாக மத்திய கிழக்கிற்குச் செல்லும் தொகை அதிகரித்துள்ளது. வடக்கு கிழக்கு யுத்த நிலைமை காரணமாக முஸ்லிம் மக்களின் வருவாய்த்துறைகளான வர்த்தகமும். பயிர்ச்செய்கையும். கால்நடை வளர்ப்பும் மோசமான பொருளாதாரப் பின்னடைவைத் தந்துள்ளது. இப்படியான வீழ்ச்சியின். புறக்கணிப்பின் விளைவு முஸ்லிம் மக்களுக்கு முன் எதிர்கொண்டுள்ளது. பொருளாதார ஆக்கிரமிப்பு, தாயக ஆக்கிரமிப்பு அரசியல் ரீதியாக முஸ்லிம்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி உள்ளது. முஸ்லிம்கள் இனப்படுகொலைகள். இனச்சுத்திகரிப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளன.

இலங்கை முஸ்லிம்கள் மீதான இனப்படுகொலை. இனச்சுத்திகரிப்பு. கலவரங்கள் போன்றவற்றையும், முஸ்லிம்களின் சமகால சமூக நிலவரங்களை தொட்டுக்காட்டும் எழுத்துக்கள், நூல்கள் வெளிவரவேண்டும். நமது மக்களின் இழப்புகளின் துயரத்தின் பதிவுகளை ஆவணமாக்கும் முயற்சி அவசியத்திலும் அவசியமாகும்.

-பாதுஷா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்லின சமூகங்களையுடைய இலங்கையில் இனங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படக் காரணம்; அத்தகைய சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வு இல்லாமையே என்று கூறலாம். அத்தகைய புரிந்துணர்வினை சமூகத்திற்கு வழங்குவதில் படைப்பாளிகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றனர். இஸ்லாத்தைப் பற்றி சிங்கள வாசகர்களுடன் உரையாடும் அல்-ஹாஜ் மௌலவி எச். சலாஹுதீன் இதுவரை சிங்கள மொழியில் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இனங்களுக்கிடையே ஒற்றுமையினைக் கட்டியெழுப்புவதே தனது ஒரே குறிக்கோளாகுமென்று கூறும் மௌலவி சலாஹுதீன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் 200க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார்.**

# இலங்கையர்களுக்காகவே நான் புத்தகங்கள் எழுதுகிறேன்!

**அல்-ஹாஜ் மௌலவி எச். சலாஹுதீன்**

*தங்களது பின்புலத்தைப் பற்றிக் கூறுங்கள்?*

எனது கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்து கொண்டதன் பின்னர்; நான் கற்றவற்றினை உலக மாந்தருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று எண்ணினேன். உரைகள் நிகழ்த்துவதன் மூலமாகவும், இவ்வாறு நூல்களை வெளியிடுவதன் மூலமாகவும் அப்பணியினை ஆரம்பித்தேன். 1957 லிருந்து நான் இந்தப் பணியினை மேற்கொண்டு வருகின்றேன். அன்றிலிருந்து இன்றுவரை 213 தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். 'மா துடு மக்கம்' (நான் கண்ட மக்கா) என்பதே நான் முதன் முதலாக எழுதி வெளியிட்ட சிங்கள மொழி நூலாகும். 1963ல் எழுதிய அந்த நூலினை அக் காலத்தில் பதவி வகித்த அஸ்கிரிய மகா நாயக்க தேரரிடம் கையளித்தேன். 150க்கும் மேற்பட்ட இஸ்லாத்தினைப் பற்றிய சிங்கள நூல்களினை நான் எழுதி வெளியிட்டுள்ளேன். இந்த அனைத்துத் தகவல்களினையும் உள்ளடக்கியதான பாரிய நூல் ஒன்றினை மும்மொழிகளிலும் வெளியிடுவதற்கான பணியில் நான் தற்போது ஈடுபட்டுக் கொண்டுள்ளேன்.

இஸ்லாத்தினைப் பற்றிய நூல்கள் வெளியிட்ட எனக்கு மலேசிய அரசாங்கத்தினால் விருதொன்றும் வழங்கப்பட்டது. மலேசியாவின் தொழில் அமைச்சரான சாமிவேலு அந்த விருதினை வழங்கி என்னை கௌரவித்தார். இலங்கையில் இதுவரை எவ்வித விருதும் எனக்குக் கிடைக்கவில்லை.

*தாங்கள் அதிகளவில் மதப்பின்னணியிலேயே நூல்களை வெளியிட்டுள்ளீர்கள். அதனூடாக தாங்கள் எதிர்பார்ப்பது என்ன?*

கடந்த நூற்றாண்டில் வட்டி அறவிடுவதே இந்த உலகத்தின் சாபமாக இருந்தது. எமது மார்க்கத்தின் படி வட்டியானது தடை செய்யப்பட்ட ஒன்றாகும். அதுபற்றி நான் மும்மொழிகளிலும் எழுதினேன். நான் எழுதிய சிங்கள மொழி நூலினது பெயர் 'பொலிய நம் வூ முஸீபத்' (வட்டி எனும் முஸீபத்) என்பதாகும். மும்மொழிகளிலும் ஆறு இலட்சம் பிரதிகள் வெளியிட்டு நூலகங்கள் உட்பட பல நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளித்தேன்.



எயிட்ஸ் நோயைப் பற்றியும் நான் மும்மொழிகளிலும் நூல்கள் வெளியிட்டுள்ளேன். அதற்குப் புறம்பாக, சிறுவர் உரிமைகள் பற்றி நான் எழுதிய நூல்கள் யுனிசெப் நிறுவனத்தினால் பாராட்டப்பட்டது.

*ஓர் இலக்கியவாதியாக புகழ்பெற்றுள்ள தாங்கள் ஆன்மீக படைப்புக்களை அதிகளவில் வெளியிட்டதற்கு ஏதேனும் விஷேட காரணங்கள் உண்டா?*

நான் பல உலக நாடுகளுக்கு சுற்றுலாக்களை மேற்கொண்டிருக்கிறேன். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல புதிய அனுபவங்களை பெற்றேன். அவற்றினை நான் எனது படைப்புக்களின் மூலமாக வெளியிட்டேன். ஆன்மீகப் பின்னணியினை அடிப்படையாகக் கொண்டு அவற்றினை எழுதும் போது மக்களுடன் மிகவும் நெருங்க முடியுமென்று நம்புகிறேன்.

*தங்களது சிங்கள மொழி மூல படைப்புக்களுக்கு வரவேற்பு எப்படியுள்ளது?*

நான் 30 வருட காலமாக சிங்கள பாடசாலைகளில் கற்பித்திருக்கிறேன். அநுராதபுரம், கண்டி ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றியுள்ளேன். அதே போன்று எனக்குரிய பள்ளிவாசல் குத்பா பிரசங்கங்களை சிங்கள மொழி மூலமே ஆற்றுகிறேன்.

**இன்னும் சிறிது காலத்தில் இந்த நாட்டு முஸ்லிம்கள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுவார்கள். சிங்களம் பேசுகின்ற முஸ்லிம்கள், தமிழ் பேசுகின்ற முஸ்லிம்கள் என்பதே அந்த இரண்டு பிரிவுகளுமாகும்.**

*இந்த நாட்டில் இஸ்லாமிய இலக்கியத் தினைக் காணமுடியவில்லை. அதற்கான காரணத்தினை எவ்வாறு விளக்குவீர்கள்?*

இதுவோர் முரண்பாட்டுக்குரிய காரணமாகும். இந்நாட்டு முஸ்லிம்களுள் 40 சதவீதமானோர் சிங்களமொழி மூலம் கற்று, சிங்களத்தால் சிந்தித்து, சிங்களத்தினால் எழுதுபவர்களே அதிகமுள்ளனர். ஆகவேதான் நான் சிங்கள மொழி மூலம் எழுதுகிறேன்; எழுத முற்பட்டேன். எனது நம்பிக்கையின்படி இன்னும் சிறிது காலத்தில் இந்த நாட்டு முஸ்லிம்கள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுவார்கள். சிங்களம் பேசுகின்ற முஸ்லிம்கள், தமிழ் பேசுகின்ற முஸ்லிம்கள் என்பதே அந்த இரண்டு பிரிவுகளுமாகும். அந்த சிங்களம் பேசும் முஸ்லிம்களை கருத்தில் கொண்டே நான் சிங்கள மொழி மூலம் எழுதுகிறேன். சிறு நூல்களின் கூட்டாக எதிர்காலத்தில் வெளியிடவுள்ள பெரிய மும்மொழிகளிலான நூல்களை இலங்கையிலுள்ள அனைத்து நூலகங்களுக்கும் இலவசமாக வழங்குவதற்கு எண்ணியுள்ளேன். உயர் ஸ்தானிகராலயங்களுக்கும் இந்நூல்களை வழங்குவதற்கு எண்ணியுள்ளேன். இஸ்லாத்தினைப் பற்றி நான் சிங்கள மொழி மூலம் எழுதி வெளியிடுகின்ற நூல்களுக்கு சிங்கள சமூகத்தில் பெரும் வரவேற்புள்ளது.

இந்த நாட்டில் வாழும் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்பதே எனது அவாவாகும். அதற்காக வேண்டியே எனது பேனாவினை நான் கையாள்வேன். சிங்கப்பூரிலுள்ள அனைவரும் 'சிங்கப்பூரியனாக' வாழ்வது போல்; இலங்கையிலுள்ள அனைவரும் 'இலங்கையர்' எனும் மன இயல்புடன் வாழவேண்டும். அதன் காரணமாகவே மும்மொழிகளிலும் நான் ஆக்கங்களைப் படைக்கிறேன்.

நன்றி : லங்காதீப.

# ஸகாதுல் பித்ர்

**ஸகாதுல்** பித்ர் என்றால் ரமழான் மாதம் முழுவதும் நோன்பை நோற்ற பின் அதற்காக கொடுக்கும் ஸதகாவைக் குறிக்கும். இதனை ஸதகதுல் பித்ர் எனவும் அழைப்பர். ஸகாதுல் பித்ரைப் பற்றி இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் குறிப்பிடும்போது வீணான காரியங்களில் ஈடுபடுதல், மோசமான வார்த்தைகள் பேசுதல் போன்றவற்றிலிருந்து ஒரு நோன்பாளியைத் தூய்மைப்படுத்தவும், ஏழைகளுக்கு உணவாக அமையவுமே நபியவர்கள் அதனை கடமையாக்கினார்கள். எனவே ஹதீஸ் ஆதாரங்களின் படி ஸகாதுல் பித்ர் பின்வரும் காரணத்திற்காக கடமையாக்கப்பட்டிருக்கிறது.

01) நோன்பாளிகளின் நோன்பில் ஏற்படும் தவறுகள், பிழைகள் போன்றவற்றை நீக்குதல்

02) நோன்புப் பெருநாளன்று ஏழை எளியவர்கள் அனைவரும் சந்தோசமாக நோன்புப் பெருநாளை கொண்டாட வேண்டும் என்பதற்காகவே இது கடமையாக்கப்பட்டது.

**யார் மீது கடமை?**

நபி (ஸல்) அவர்களது ஹதீஸின்படி சட்ட அறிஞர்கள் நோன்பு நோற்ற முஸ்லிமான ஆண், பெண், சிறுவர்கள் அனைவர் மீதும் ஸகாதுல் பித்ர் கடமை எனக் குறிப்பிடுகின்றனர். குடும்பத்தில் பொறுப்பாக இருக்கின்றவர் தனது பராமரிப்பின் கீழ் இருக்கின்ற அனைவருக்காகவும் ஸகாதுல் பித்ரை கொடுத்தல் வேண்டும். ஸகாதுல் பித்ர் கடமையான நேரம் பெருநாள் பிறை கண்ட மஃரிபிலிருந்து அடுத்த நாள் பெருநாள் தொழுகை வரையாகும். நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்கு முன்னர் ஸகாதுல் பித்ரை கொடுங்கள் என குறிப்பிட்டிருக்கின்றார். எனவே குறித்த காலத்திற்குப் பிறகு பிற்படுத்துவது கூடாது. பெருநாளைக்கு மூன்று நாட்களுக்கு முன்பே கொடுக்க ஆரம்பிக்கலாம். குழுக்களாக ஒன்றுசேர்ந்து பகிர்ந்து கொடுப்பது சிறப்பானதாகும்.

**கந்தளாய் என்.எம். முர்ஷித்**

# அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவு; வீழ்ச்சி அடையும் மக்களின் வாழ்க்கைத்தரம்!



**பொருட்கள** மற்றும் சேவைகளின் விலைகள் மிக வேகமாகவும், தொடர்ச்சியாகவும் அதிகரிப்பதன் காரணமாக மாதாந்தம் மக்களின் வாழ்க்கைச் செலவானது அதிகரித்து வருகிறது. அதன் பெறுபேறாக மக்களின் வாழ்க்கைத் தரமானது வீழ்ச்சியடைந்து வருகிறது.

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பும், வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சியும் நேரடியாகவும் மறைமுகமாகவும் முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தும்.

தற்காலத்தில் காணக்கூடியதாக உள்ள உள்நாட்டு மற்றும் அரசியல் வியூகங்களுக்கு அமைய பொருட்களின் விலை அதிகரிப்பினை தவிர்க்க முடியாது. எதிர்காலத்தில் அரச மற்றும் தனியார் துறைகளில் நிரந்தர சம்பளத்தில் தொழிலொன்று செய்வதால் மட்டும் வாழ்வினை நடத்திச் செல்ல முடியாது.

மக்கள் வாழ்க்கையை நடாத்திச் செல்வதென் றால் பெரும் போராட்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது. அதிகரித்து வரும் விலையேற்றம் மக்களை பெரும் நெருக்கடிக்குள் தள்ளி விட்டிருக்கிறது.

# கண்ணிய ரமழானே!

வந்தது பெருநாள் - இன்பம்
வார்த்தது வாழ்வில்
சிந்தையில் மகிழ்ச்சி - துள்ளிச்
சிந்துதே யெங்கும்!

இஸ்லாமியர் பெருநாள்
இனிக்கும்
அமிழ்தமாம் திருநாள்
முஸ்லிம்கள் போற்றும் தூய
மேன்மையாம் நந்நாள்!

ஈதுல் பெருநாளில் - இருக்கும்
ஈகை முஸ்லிம்கள்
ஏற்றம் நிறைந்திட - என்றும்
இலங்கிடும் பொன்நாள்!

வன்மைகள் களைந்திட வந்த
வண்ணமாம் திரு நாள்
நன்மைகள் பொழிகுவாய் - நாளும்
[illegible]



**மூதூர் 'கலைமேகம்'**

**ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா? நாம் எழுதுவதற்கும் நமது மக்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் விவாதங்களைத் தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாற்றுக் குரல்கள்

# முஸ்லிம்களை இஸ்லாமியத் தமிழர்கள் என பச்சை குத்த முடியுமா?

**மிதவாத** தமிழ் அரசியல் தலைமை தொட்டு ஈறாக தோன்றிய ஆயுதம் ஏந்திய இ ரம் தலைமை வரை இஸ்லாமியத் தமிழர்கள் என்ற கருத்தில் நிலை கொண்டிருக்கின்றனர் என்பதற்கு பின்வரும் கூற்றை ஆதாரமாகக் கூறலாம். "இலங்கையில் முஸ்லிம்கள்" என அழைக்கப்படும் மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவிய தமிழர்களே..! இந்த இஸ்லாமிய தமிழர்கள் இலங்கை தமிழ்த் தேசிய இனத்தின் இணைபிரியாத ஒரு அங்கம் என்பது எமது நிலைப்பாடு" என 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 'இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்' என்ற தலைப்பின் கீழ் தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்ட வெளியீடாகும். இதற்கமைவாகவே இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் அவர்கள் அண்மைக்காலமாக கூறிவருகின்றார். முஸ்லிம்களைப் பொறுத்தவரை "மொழி" ஒரு பிரச்சினையாக அமையவில்லை. உலகின் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம்கள் எந்த மொழியைப் பேசினாலும் அதனை ஒரு தொடர்பு ஊடகமாக கருதுகின்றனரே தவிர வேறில்லை. உலகில் முஸ்லிம்கள் மொழிக்கு அந்தஸ்த்து வழங்கி வழிப்பட்டதோ: மொழிப்போராட்டம் நடாத்தியதாகவோ சரித்திரம் இல்லை. ஆதலால் மொழித்திணிப்பு முஸ்லிம்களிடம் வெற்றி பெறும் வாய்ப்பில்லை.



எனவே மொழியை வைத்து இலங்கை முஸ்லிம்களையோ. உலகில் வேறெங்கு வாழும் முஸ்லிம்களையோ அடையாளம் காணத்தக்கவர்கள் அல்ல என்பது பட்டவர்த்தமான உண்மை. இதற்கு மாற்றமான நடவடிக்கையில் ஏனைய சமூகத்தினர் இறங்குவதென்பது அர்த்தமற்ற போக்கென்பது தெளிவானதே. 'தமிழர்கள்தான் இஸ்லாத்தைத் தழுவியிருக்கிறார்கள்' என்பதை ஒரு வாதத்திற்காக ஏற்றாலும் கூட இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை இஸ்லாமியத் தமிழர்கள் எனக் கூறுவது சாத்தியமற்ற ஒன்று என்றே கூற வேண்டும்.

பிறப்பு, தாய்நாடு, நிறம், தாய்மொழி போன்றவை இயற்கையான அமைப்புக்கள் என்பதால் இவற்றை அடிப்படையாகக் கொண்ட இனம் பற்றி இஸ்லாம் கோட்பாடுகளை ஏற்கவில்லை. இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக இருப்பதனாலோ, அல்லது தமிழ் மொழியைப் பேசுவதனாலோ 'இஸ்லாமியத் தமிழர்கள் என பச்சை குத்த முடியாது'. ஏனெனில் ஈரானில் வாழும் முஸ்லிம்கள் பாரசீக மொழியை பேசுவதால் அவர்களை பாரசீக முஸ்லிம்கள் என்று கூறுவதில்லையே!

இந்த வரையறைக்கு மாற்றமான கருத்துக்கள் மொழி பற்றி முஸ்லிம் அல்லாதவர்களிடம் இருக்கலாம் அதற்காக முஸ்லிம்கள் அவற்றினை ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயத் திணிப்பை மேற்கொள்வது அறிவுபூர்வமானதல்ல.

முஸ்லிம்களை தமிழினத்துள் அடக்கி இனங்காட் - முற்படுவதற்கு பிரதான காரணம் ஆளும் வர்க்கமாக தமிழ சமூகமும், ஆளப்படுபவர்களாக முஸ்லிம் சமூகமும் இருக்க வேண்டும் என்கிற குறுகிய வேட்கையின் விளைவென்று துணிந்து கூறலாம். முஸ்லிம்கள் தனியானதொரு சமூகக் குழுவென பல்வேறு கட்டங்களில் பல்வேறு கோணங்களில் ஆதாரங்களை அறைந்தும், இல்லை முஸ்லிம்கள் தமிழினம்தான் எனும் பல்லவியை மீண்டும் மீண்டுமாக பாடுவதன் உள் நோக்கம்தான் என்ன?

'தமிழ் பேசும் மக்கள்' என்ற சொற்றொடர் முஸ்லிம்களை தமிழினமாகக் காட்டும் நோக்கில்தான் பாவிக்கப்பட்டதென்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. அன்றிலிருந்தே இச்சொற்றொடரும் நிராகரிக்கப்பட்டதாகும். இலங்கை வாழ் சமூகங்களுக்குள் பிரிவினை உணர்வுகள் எப்போது வேர் விட்டதோ அப்போதே முஸ்லிம்களும் தங்களை தனியான ஒரு சமூகம் என்பதை இனங்காட்டி வந்திருப்பதை வரலாறு நன்கு புடம்போட்டுக் காட்டத்தவறவில்லை. ஆகவே 'தமிழ் பேசும் மக்கள்' இஸ்லாமியத் தமிழர்கள் என்ற சொற்றொடர்கள் ஏற்கனவே முஸ்லிம்களால் நிராகரிக்கப்பட்டு வந்திருப்பதை நாம் அவதானிக்கலாம்.

**எஸ்.எல்.எம். றாபி, நிந்தவூர்.**

# அரசாங்கம் சார்பு நிலையே முஸ்லிம்களின் பாதுகாப்பு!

**மு.கா** கட்சியினால் விலக்கப்பட்டு, பின்னர் நீதிமன்ற ஆணைப்பிரகாரம் விலக்கப்பட்டது தவறானதென்ற தீர்ப்பைப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களாக மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மூவரும் அமைச்சுப் பொறுப்புக்களை (திட்ட அமைச்சர்கள்) பெற்றுக்கொண்டமை தொடர்பாக மு.கா தலைமையினால், எலும்புத் துண்டைப் பொறுக்குபவர்கள் என்ற கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகம் பொறுப்பு மிகைத்தவர்களின் பயன்பாட்டிற்குரியதல்ல. இவர்கள் கட்சியில் இருந்து பிரிந்து அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டமைக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் என்ற குற்றச்சாட்டானது பொருத்தப்பாடாகயில்லை. ஏற்கனவே மு.காவிலிருந்து விலக்கப்பட்ட நிலைமையில் இருந்தவர்களையே ஜனாதிபதி அவர்கள் அணுகி தமக்குச் சார்பாக செயற்பட வைத்துள்ளார். புதிதாக அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அரசியல் நடப்புகள் ஏதும் அறியாதவர்கள் இல்லை. பா.உறுப்பினர் அமீர் அலி தவிர மற்றைய இருவரும் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

2000ம் ஆண்டு தேர்தலில் சிறுபான்மையின பாராளுமன்ற உறுப்பினர்களை எவ்வாறு ஐ.தே.கட்சி தன்னகத்தே ஈர்த்தெடுத்து 2001ம் ஆண்டு தேர்தலுக்கு வழியமைத்து ஆட்சிப் பொறுப்பினை தனதாக்கிக்கொண்ட அரசியல் நகர்வுகள் சரியானதென அடையாளப்பட்டால்; ஐ.ம.சு.முன்னணி ஆட்சி நிலையைத் தக்க வைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அதேபாணியிலான அரசியல் நகர்வுகளும் சரியானதே. அண்மைக்கால அரசியல் நிலவரங்களை அவதானிக்கும் போது இவ்வாறான செயற்பாடுகளென்பது சாதாரணமானதே. இதனை அரசியல் ரீதியிலான அவர்களினது சாணக்கிய வல்லமை என்பதாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மு.கா பாராளுமன்ற உறுப்பினர்களை ஐ.ம.சு. முன்னணி சார்பாக இணைத்துக்கொண்டமை தொடர்பாக மு.கா தலைமையினால் வெளிப்படுத்தப்பட்ட விமர்சனத்தில் மேலும் கூறப்பட்டதாவது; மறைந்த தலைவர் அஷ்ரஃப் அவர்கள் இறுதியாக ஜனாதிபதி அவர்களை கடுமையாக விமர்சித்து 50 பக்கங்கள் கொண்ட கடிதத்தை எழுதியிருந்தார். இயலுமாயின். அக்கடிதத்தை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தட்டும் என்றும், இறுதியாகக் ஹெலிக்கெப்டரில் பயணமாகும் போது இந்த ஜனாதிபதிக்கு இனிமேல் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் மறைந்த தலைவர் கருத்து வெளியிட்டிருந்தார் என்பதாகவும் மு.கா தலைவர் தெரியப்படுத்தியுள்ளார்.

2000ம் ஆண்டு தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஏற்பட்ட முரண்பட்ட தன்மைகளினால் மறைந்த தலைவர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டதன் விளைவே ஜனாதிபதிக்கு இடையிலான கருத்து வேறுபாடுகளும் 50 பக்க கடிதமும் என்ற விடயத்தை சகலரும் அறிந்ததே. தேர்தலின் பின்னர் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதில்லை என்ற விடயம் பகிரங்கப்படுத்தப்படாதது. ஆனால்



சகலதும் தெளிவுற அறிந்திருந்த அன்றைய மு.கா கட்சியின் பொதுச் செயலாளர் அவர்கள் 2000ம ஆண்டு தேர்தலில் கண்டி மாவட்டத்தில் தே.ஐ.முன்னணி கட்சியில் போட்டியிட்டு பொ.ஐ.முன்னணி ஆட்சியில் பங்குகொண்டதுடன், அமைச்சரவை அந்தஸ்த்துடனான கப்பல்துறை துறைமுகங்கள் அமைச்சராகவும் அதே ஜனாதிபதி அவர்களின் தலைமையில் சத்தியப்பிரமாணம் செய்தமை சற்று உறுத்தலாகவே அவதானிக்க முடிகின்றது.

இன்றைய அரசியல் நிலைமையில் ஒரே ஸ்தாபனத்தில் அங்கம் வகித்தவர்கள் ஐ.தே.கட்சி மற்றும் ஐ.ம.சு.முன்னணி என்ற இரு அணி சார்பான உறவுக்குள் ஐக்கியமாகியுள்ளனர். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாரியளவான அரசியல் தேவைகளை அவதானிக்கும் போது எதிர்க்கட்சி சார்பான அரசியல் நிலைப்பாடு யதார்த்தபூர்வமாக இல்லை. ஆளும் தரப்பில் வல்லமை கொண்ட நிலைமையில் பல முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தும் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் பிரதேசங்களுக்கும் இரண்டாம் நிலை கவனிப்பே அதிகளவாக உள்ளது. முஸ்லிம்களின் தேவைகளும் அரசியல் அபிலாசைகளும் முறையான வகையில் ஈடேற்றம் பெற வேண்டுமானால் முதற்கட்டமாக ஆளும் தரப்பு சார்பாக செயற்படும் சகல முஸ்லிம் தலைமைகளும் ஓரணிக் கொள்கையை அமுல்படுத்த வேண்டும். நமது பலத்தை நிரூபிப்பவர்கள் நாமே என்பதை உணர்த்தல் வேண்டும்.

**அ.மு. அனஸ் - திருகோணமலை**

# மூதூர் முஸ்லிம்கள் உண்மை பதிவு செய்யப்பட்டு; சர்வதேச சமூகத்திற்கும் தெரியப்படுத்தப்படல் வேண்டும்!

**தமிழர்** போராட்டத்தின் ஆரம்பகாலம் முதல், காலத்துக்குக் காலம் உயிரிழப்புகளையும், சொத்தழிவுகளையும் சந்தித்து தொடர்ச்சியான இன ஒடுக்கல்களையும் அனுபவித்து வரும் 'மூதூர் முஸ்லிம் சமூகம்' அவைகளைப் பாரிய திட்டமிடலுடனும், ஒழுங்கமைப்புடனும் இன்றுவரை தேசிய, சர்வதேச தளங்களில் வலுவாக முன்வைக்கவில்லை அல்லது முன்வைத்தது போதாது என்றே எண்ணத் தோன்றுகிறது.



இதில் கரிசனையற்றிருக்கின்ற நாம், ஆதிக்க சமூகங்களால் தகவல் தொழிநுட்ப சாதனங்களுடாக தேசிய - சர்வதேசத்தில் இருண்டயுகவாசிகளாக, குற்றவாளிகளாக, கொடூரமானவர்களாக காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதனை நாம் அறியாமல் இருக்கிறோமா? அல்லது அறிந்தும் அசட்டையாக இருக்கிறோமா? இதில்தான் அவர்கள் (தமிழர்கள்) எங்கேயோ இருக்கிறார்கள். 'தமிழ் நெட்' உட் பட, தமிழர் சார்பு பல்வேறு வெப்தளங்கள் (Webside) மூலம் மூதூர் முஸ்லிம்களைப் பற்றிய பிழையான, பொய்யான தகவல்களை உலகிற்கு அவ்வப்போது முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் கூட வெளிநாட்டு நிறுவனம் ஒன்று மூதூர் முஸ்லிம்களைப் பற்றிய பிழையான, பொய்யான தகவல்களை உள்வாங்கியிருக்கிறது. இதுதவிர மூதூர் வலயக்கல்வி அலுவலகம் மூதூர் பிரதேச தமிழர்களுக்கு அநீதி இழைப்பதாகவும் ஒரு புரளியை அவிழ்த்து விட்டிருக்கிறது.

ஆகவே இவ்வாறான சவால்களை நாம் எதிர்கொள்வது எப்படி? ஆர்ட்டிலரிகளையும், AK 47 துப்பாக்கிகளையும் விட வலிமையான தகவல் - தொழிநுட்ப சாதனங்களின் பொய்ப்பிரச்சாரங்களையும், புனைவுகளையும் எவ்வாறு முறியடிப்பது? நாமும் தமிழர்சார்பு வெப்தளங்களுக்கு மாற்றீடான வெப்தளங்ளை உருவாக்குவதைத் தவிர வேறுவழியில்லை. அவ்வாறு உருவாக்கி பதிவுசெய்து அதன் மூலம் எமக்கெதிரான பொய்ப்பிரச்சாரங்களை முறியடிப்பதோடு: நம்மைப் பற்றிய உண்மைகளையும், எமக்கு எதிரான அடக்குமுறைகளையும், இன ஒடுக்கல்களையும் உலக அரங்கில் உடனுக்குடன் முன்வைக்க வேண்டும். (எல்லா முஸ்லிம் பிரதேசங்களுக்கும் இது பொருந்தும்). முஸ்லிம் சமூகம் சார்பான வெப்தளங்களை வடிவமைத்து, உரியமுறைப்படி பதிவுசெய்து ஆரம்பம் முதல், இன்றும், எதிர்காலங்களிலும் நடந்த, நடந்துகொண்டிருக்கின்ற, நடக்க இருக்கின்ற வன்முறைகள், அடக்குமுறைகள், மனித உரிமை மீறல்களை உடனுக்குடன் தேசிய, சர்வதேச அரங்குகளில் முன்வைப்பதன் மூலம் சர்வதேசமெங்கும் எமது குரல் ஓங்கி ஒலித்து நியாயம் கிடைக்க வழிபிறக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**அபூ முஸ்லிம், திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லீம் மக்கள் மீதான வன்முறையும், அதற்கு எதிரான போராட்டமும்

தொடர் 07

மதக் கூறு இங்கு ஒரு அரசியல் வடிவமாக முஸ்லீம் மக்கள் மத்தியில் இருக்கவில்லை. அதாவது தமிழ் மக்கள் போல் முஸ்லீம் மக்களும் இனக் கூறுக்கே முதன்மை அழுத்தம் கொடுத்தனர். பள்ளிவாசல் மேலான தாக்குதல்களின் போதும் கூட, இது வெளிப்பட்டு விடவில்லை.

தமிழ்த் தேசிய இயக்கங்கள் குறுந்தேசிய இயக்கங்களாக சீரழிந்து பரிணமித்த வரலாற்றில், முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதல் ஒரு அரசியல் செயற்பாடாக, ஒரு செயல்வடிவமாக மாறியது. இதில் இந்தியாவின் குறிப்பான பங்களிப்பும் உண்டு. அநுராதபுரத்தில் 1985 இல் சிங்கள மக்கள் மேலான புலிகளின் தாக்குதலை, இந்தியா கூறியே புலிகள் செய்ததாக பாலசிங்கம் கூறியது இங்கு கருத்தில் எடுப்பது அவசியமாகும். முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதலாக வளர்ச்சி பெற்று இனக் கலவரமாக, இன அழிப்பாக மாறிய படுகொலை வரலாற்றில், இந்திய ஆக்கிரமிப்பு நலன்களும் இணைந்த புதிய தேசியக் கட்சியாகவும் பரிணமிக்க வைத்தது. இது இயக்கங்களின் அதிகாரத்தை முஸ்லீம் சமூகங்கள் மத்தியில் கேள்விக்குள்ளாக்கியதுடன், வரி மற்றும் பணச் சேகரிப்பை தடுத்தது. இந்த புதிய சூழ்நிலைக்கான காரணகாரியத்தை இயக்கங்கள் ஆய்வு செய்து, தேசிய போராட்டத்தை சரியாக முன்னெடுப்பதற்கு பதில், பழையகுறுந்தேசிய இனவாதத் தாக்குதலை அதிகரித்தனர். முஸ்லீம் காங்கிரஸ் மாகாணசபை மூலம் முஸ்லீம் மக்கள் மேலான அதிகாரத்தை வெற்றி கொண்ட காலம் தான், அந்த மக்கள் மேலான தாக்குதலின் உச்ச ஆண்டுகளாகும். இந்தியாவின் தயவில் ஆட்சிபீடம் ஏறிய கைக்கூலி பொம்மை அரசுகள், ஈவிரக்கமற்ற முஸ்லீம் படுகொலையை நடத்தத் தொடங்கினர். இதனால் ஏற்பட்ட எதிர் தாக்குதல்களுக்கு பதில் கொடுக்கும் வண்ணம் புலிகளும், இந்த கூலிக்குழுக்களின் வழியில் முஸ்லீம் மக்களை ஒடுக்குவதில் சமாந்தரமாகவே செயற்பட்டனர். கொன்றதன் மூலம், இனப் பகைமை கூர்மையாக வளர்ச்சி பெற்றது. தமிழருக்கே அவமானமான நினைவுச் சின்னமாகியது. முஸ்லீம் மக்களை இனியும் தமது அதிகாரத்தின் கீழ்

**எழுதுவது - சமரசம் -**

> மாகாண சபைக்கான தேர்தலில் முஸ்லீம் காங்கிரசை எதிர்க்கட்சியாகவும் புதிய தேசியக் கட்சியாகவும் பரிணமிக்க வைத்தது. இது இயக்கங்களின் அதிகாரத்தை முஸ்லீம் சமூகங்கள் மத்தியில் கேள்விக்குள்ளாக்கியதுடன், வரி மற்றும் பணச் சேகரிப்பை தடுத்தது.

வகையிலேயே திணிக்கப்படுகின்றது. இந்திய ஆக்கிரப்பின் போது, தமிழ் மக்களை ஏமாற்றி உருவான சமாதான நாடக மேடையில் உருவாக்கிய புதிய அதிகார அலகுகளை நோக்கி இப் படுகொலை



ஊக்குவிக்கப்பட்டது. இந்தியாவின் இந்துத்துவக் கண்ணோட்டம் இதன் நெம்புகோலானது. தொடர்ச்சியான தமிழ் இயக்கங்களின் முஸ்லீம் விரோதக் கண்ணோட்டம், முஸ்லீம் தேசிய உணர்வுகளை தட்டியெழுப்பிய நிலையில், மாகாண சபைக்கான தேர்தலில் முஸ்லீம் காங்கிரசை எதிர்க்கட்சியாகவும் ஒரு இனத்துக்கு எதிரான தாக்குதலில் புலியும் அதன் எதிர் அணியான கைக்கூலி அமைப்புகளும் ஒன்றுபட்டு கைகோர்த்து நின்றனர். இங்கு இந்தியாவின் சதி வலைகளை அம்பலம் செய்து முஸ்லிம் மக்களை அணிதிரட்ட வேண்டிய பாரிய பொறுப்பை, புலிகள் எதிர்நிலையில் கையாண்டனர்.

இந்திய ஆக்கிரமிப்பாளனை இலங்கை அரசு கட்டாயப்படுத்தி வெளியேற்றிய போது, புலிகள் இழந்துபோன அதிகாரத்தை கைப்பற்ற தமிழ் கைக்கூலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதலை சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து நடத்தினர். கட்டாய இராணுவத்தில் இணைக்கப்பட்ட பல அப்பாவி இளைஞர்கள் உட்பட, பலர் அக்கால செய்திப் பத்திரிகைகளிலே குறிப்பிடுமளவுக்கு ஒவ்வொரு நாளும் பல நூறு பேர் வீதிகளில் கொல்லப்பட்டனர். அதேநேரம் புலிகள் முஸ்லீம் பகுதியில் இழந்த அதிகாரத்தை கைப்பற்ற முஸ்லீம் மக்கள் மேல் தொடர்ந்து தாக்குதலை நடத்தினர்.

புகழ்பெற்ற பள்ளிவாசல் கொலைகள் உட்பட சில நூறு பேரை கொண்டு வரமுடியாது என்பதை, புலிகளின் குறுந்தேசிய இன அழிப்பு தொடர்ச்சியாக நிறுவிய நிலையில் தான், பழிவாங்கலாக வடக்கில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை துரத்திவிடும் நிகழ்வு நிகழ்கின்றது. வடக்கில் இருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றிய நிகழ்வை, கிழக்கில் இருந்து வந்த புலிகளின் தலைமையே செய்தது. அக்காலத்தில் இதை எதிர்த்த தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் வடக்கில் இருந்த புலிகளிடம் கேட்டபோது, கிழக்கில் இருந்து வந்தவர்களே செய்தனர் என்று கூறுமளவுக்கு, அக்காலகட்ட செய்திகள் செய்திப் பத்திரிகைகளில் பதிவாகியுள்ளது.

வடக்கில் இருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்ட நிகழ்வு, கிழக்கில் அதிகாரத்தை கைப்பற்ற ஏற்பட்ட தோல்வியின் பிரதிபலிப்பே. பிரபாகரன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் இது தெளிவாக வெளிப்படுகின்றது. "சிங்கள இனவாதிகளும், சுயநலமிக்க முஸ்லீம் அரசியல்வாதிகளுமே தமிழ் மக்களுக்கிடையே வேறுபாட்டைப் பெரிதாக்கிப் பகையை உருவாக்கினார்கள்.

(தொடரும்..)

## இந்தக் கூட்டமைப்பும் நிரந்தரமானதல்ல!



-அமைச்சர் லால்காந்த-

இந்த நாட்டில் எவ்வளவுதான் கூட்டமைப்புக்கள் உருவாக்கப் பட்டிருப்பினும் அவை நிரந்தரமான வையல்ல. அதுபோன்று இதுவும் நிரந்தரமானதோர் கூட்டமைப்பல்ல. இதன் மூலமாக சாதிக்க வேண்டிய சில கடமைகள் எமக்குள்ளன. அக்கடமைகள் நிறைவேறாவிடில் இந்தக் கூட்டமைப்பினாலும் எவ்விதப் பயனுமில்லை என அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

## இராணுவப்பதவி வகிக்க முஷார.்.புக்கு அனுமதி!



**ஜெனரல்** பர்வேஸ் முஷார.ஃ.பிற்கு ஜனாதிபதி பதவிக்குப் புறம்பாக இராணுவப் பதவியினை வகிப்பதற்கும் அதிகாரம் வழங்கும் சட்டம் அண்மையில் அந்நாட்டு மேல் சபையான செனட் சபையினால் அதிக வாக்குகளினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

இந்தச் சட்டமானது கடந்த மாதம் கீழ்ச் சபையினால் அதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. செனட் சபையில் இந்தச் சட்டத்தினை எதிர்க்கட்சி பா.உக்கள் வன்மையாக எதிர்த்தனர். 'வெட்கம்' 'வெட்கம்' முஷார.ஃ.ப் வெளியேறு; துப்பாக்கியின் ஆட்சி எமக்கு வேண்டாம் போன்ற சுலோகங்களை கோஷித்தவாறு எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறினர். முஷார.ஃ.பினது ஜனாதிபதி பதவிக் காலம் 2007ல் முடிவுறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


**மூன்றாவது மனிதன், வெளியீடுகளான...**



- பலஸ்தீனக் கவிதைகள் (மொழிபெயர்ப்புக் கவிதைகள்) பேராசிரியர் எம்.ஏ. நு.ஃ.மான் **210/=**
- ஈழத்து இலக்கியத்தடம் (கட்டுரைகள்) பேராசிரியர் கா. சிவத்தம்பி **210/=**
- மறைத்தலின் அழகு (சிறுகதைத் தொகுதி) எஸ். நசிருதீன் **140/=**
- சமகால இலக்கிய ஆளுமைகள் (நேர்காணல்கள்) எம். பௌஸர் **220/=**
- பிரபஞ்சம் முதல் பூமி வரை ஏ.எல். ஷிஹாறா (விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கானது) **160/=**
- இலங்கை இனக்குழும அரசியல் (அரசியல் மாணவர்களுக்கானது) அ. யோதிலிங்கம் **100/=**
- ஆளற்ற தனித்த தீவில் நிலவு, ஈரமற்ற மழை (கவிதைத் தொகுதி) செழியன் **80/=**
- இன்றும் கேட்கும் குரல் (விபுலானந்தர் பற்றியது) செ. யோகநாதன் **200/=**
- காவு கொள்ளப்பட்ட வாழ்வு (கவிதைத் தொகுதி) ஏ.எம். ரஷ்மி **150/=**
- யுகமொன்று உடைகிறது (சிறுகதைத் தொகுதி) தங்கராசா **120/=**
- எல்லை கடத்தல் (கவிதைத் தொகுதி) ஔவை **100/=**
- அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும் (அரசியல் மாணவர்களுக்கானது) எஸ். சரவணன் **230/=**
- ஊஞ்சல் ஆடுவோம் (சிறுவர் கவிதைகள்) மு. பொன்னம்பலம் **100/=**
- தூவானம் (பத்தி எழுத்துக்கள்) அ. யேசுராசா **120/=**
- திருக்குறள் ஒழிபியல் (தமிழ்மொழி மாணவர்களுக்கானது) ஏ.எஸ்.எம். பௌஸி **70/=**
- ஓவியம் வரையாத தூரிகை (கவிதைத் தொகுதி) அனார் **100/=**
- அ.ஃ.தோ இரவு அ.ஃ.தோ பகல் (கவிதைத் தொகுதி) திருமாவளவன் **175/=**

நூல்களின் குறிக்கப்பட்ட விலையிலிருந்து 30% கழிவு வழங்கப்படும்

Advt.

குறிப்பிட்ட நூல்கள் தேவைப்படுவோர் அதுபற்றிய விபரங்களை நமக்கு எழுதவும் நூல்கள் தபாலில் அனுப்பிவைக்கப்படும் - V.P.P வசதியும் உண்டு! காசோலை / காசுக் கட்டளையாக இருந்தால் **M. Firthous** எனக்குறிப்பிடவும். காசுக்கட்டளை மாற்றும் தபால் நிலையமாக கொலன்னாவையைக் குறிப்பிடவும்!

தொடர்புகளுக்கு:-
119/15, Vivian Gunawardene Mawatta,
(Kittampahuwa Road), Wellampitiya.
Phone: 0714105877


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அஷ்ர.ஃப் நகரா? ஸக்காத் கிராமமா?

**கடந்த** 2004.10.23ம் திகதி நிந்தவூர் 23ம் கிராம சேவகர் பிரிவில் அமைச்சர் பேரியல் அஷ்ர.ஃப் அவர்களினால் "ஸக்காத் கிராமம்" என்ற பெயரில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டமொன்று திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே. நிந்தவூர் நத்வதுல் நஸ்ரில் முஸ்லிமீன் (ஸக்காத் பரிபாலன சபை) ஏழை மக்களுக்கு வழங்கிய காணியிலேயே இவ்வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் ஜும்மாப்பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, அரபிக் கல்லூரி, இஸ்லாமிய வட்டியில்லா வங்கி, ஸக்காத் பரிபாலன சபை, கூட்டுறவுச் சங்கம், கல்வி அபிவிருத்திச்சபை, விவசாய அமைப்பு போன்ற பல முக்கிய நிறுவனங்களின் தலைவராகயிருந்து; பதவிக்காலத்திலேயே இறையடியெய்திய நிந்தவூர் மக்களின் பெருமதிப்புக்குரிய தலைவர் மர்ஹூம் அல்-ஹாஜ் அமீர் மேர்ஷா அவர்களின் பெருமுயற்சியின் பயனால் உருவாக்கப்பட்ட மேற்படி கிராமத்தில், அம்மக்களால் கட்டப்பட்ட ஓலைக் குடிசைகளை அழகான கல்வீடுகளாகக் கட்டிக்கொடுத்த பெருமை அமைச்சர் பேரியல் அஷ்ர.ஃப் அவர்களேயே சாரும்.

பிரச்சினை என்னவென்றால், இவ்வீடமைப்புக்கிராமத்தின் பெயர், இக்கிராமத்தின் காரணகர்த்தா மர்ஹூம் அமீர் மேர்ஷா அவர்கள் நினைவாக "அமீர் மேர்ஷா புரம்" என வீட்டுத்திட்டத்திற்காக காணியை வழங்கிய நத்வதுல் நஸ்ரில் முஸ்லிமீன் (ஸக்காத் பரிபாலன சபை) என்ற அமைப்பினால் பகிரங்கமாக பெயரிடப்பட்டு நடைமுறையில் அழைக்கப்பட்டும் வந்தது. அவ்வாறிருக்க, ஓலைக் குடிசைகளாகவிருந்த இக்கிராமத்தை கல்வீடுகளாக நிர்மாணிக்கும் பொருட்டு கடந்த 2001.08.13ந் திகதி நடைபெறவிருந்த அங்குரார்ப்பண விழாவன்று நடப்பட்டிருந்த நினைவுக் கல்லில் எதிர்பாராத விதமாக, "அஷ்ர.ஃப் நகர்" எனப் பெயரிடப்பட்டிருந்தது. இதையறிந்த பொதுமக்கள் உடனடியாக தற்போதைய ஊடகத்துறைப் பிரதியமைச்சரும், அந்நேரம் தே.ஐ.மு.பொதுச் செயலாளராகவுமிருந்த சேகு இஸ்ஸத்தீன் அவர்களூடாக அமைச்சர் பேரியல் அஷ்ர.ஃப் அவர்களுக்கு சுட்டிக்காட்டியபோது; விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் அந்நிகழ்ச்சியை அமைச்சர் அவர்கள் ஒரு சில மணித்தியாலய முன்னறிவித்தலில் இரத்துச் செய்தார் என்பது நினைவு கூரத்தக்கது. இருப்பினும் வீட்டு வேலைத்திட்டத்தை எவ்வித தங்குதடையுமின்றி ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்லுமாறு அமைச்சர் உத்தரவிட்டிருந்ததோடு; வேலைத்திட்டமும் நடைபெறத் தொடங்கியது.

## சரித்திரத்திற்கான சாட்சிக்காரர்கள் அனைவரும் மரணிக்கும் முன்
## உண்மை வெளிக்கொணரப்படல் வேண்டும்! சரித்திரம் நிலை நாட்டப்படல் வேண்டும்!



சேகு இஸ்மாயில் அப்துல் வஹாப்

அங்குரார்ப்பண நினைவுக்கல்லில் "அமீர் மேர்ஷா புரம்" என்ற பெயருக்குப்பதிலாக "அஷ்ர.ஃப் நகர்" என்ற பெயர் பொறிக்கப்பட சில அரசியல் சுயநல நோக்கம் கொண்ட சிறிய மனிதர்களே காரணமாகவிருந்தனர் என்றும், அவர்கள் இன்னார்தான் என்றும் அந்தக்காலகட்டத்தில் பகிரங்கமாக பேசப்பட்டது. இந்த சரித்திர இருட்டடிப்புக்கு காரணமாகவிருந்தவர்களை மறைந்த தலைவர் அஷ்ஷஹீத் எம்.எச்.எம். அஷ்ர.ஃப் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் நிச்சயமாக மன்னித்திருக்கமாட்டார்.

இவ்வாறு இவ்வீட்டுத்திட்டத்தின் நகர்வுகள் மெதுவாக சென்று கொண்டிருந்தவேளையில் பேரியல் அஷ்ர.ஃப் அவர்கள் அமைச்சராகவிருந்த அரசாங்கம் மாறி சிறிது காலத்தின்பின் மீண்டும் தற்போதைய அரசாங்கத்தில் அவர் அமைச்சராக பதவி வகிப்பதன் காரணமாக குறித்த வீட்டு வேலைத்திட்டம் துரிதமாக முடிக்கப்பட்டு சென்ற 2004.10.23ந் திகதி திறந்து வைக்கப்பட்டபோது ஏற்கனவே தவறான முறையில் நடப்பட்டிருந்த "அஷ்ர.ஃப் நகர்" என்ற நினைவுக்கல் அகற்றப்படாத நிலையில் புதிதாக "ஸக்காத் கிராமம்" என்ற பெயரில் மற்றொரு நினைவுக்கல் நடப்பட்டு திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. ஒரு கிராமத்திற்கு இரண்டு பெயர்களில் இரண்டு நினைவுக்கல்கள் தற்போது அங்கு காணப்படுகின்றமை வேடிக்கையாகவும், ஆச்சரியமாகவுமுள்ளது.

"ஸக்காத்" என்பது அரபுமொழிச் சொல்லாகும். இச்சொல்லுக்கு பல கருத்துக்கள் இருப்பினும் "ஏழை வரி" என்ற கருத்தே பரவலாக பயன்படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக ஸக்காத் கிராமம் (ஏழை வரிக்கிராமம்) என்ற பெயர் சூட்டப்படுவதற்கு யார் காரணம்? மேலுள்ள சரித்திரத்திற்கான சாட்சிக்காரர்கள் அனைவரும் மரணிக்கும் முன் இக்கிராமத்திற்கான உண்மையான பெயர் சூட்டப்பட்டு; சரித்திரம் நிலைபெற சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

## நாம் வாசிக்காதவை

ரீ.ஜே. அஹமட் ஜான்

### ஐஸ் ஹோட்டல்!


இத்தாலியிலுள்ள மிலான் நகரில் ஐஸ் ஹோட்டலொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதன் பட்டறையானது சுவீடனிலுள்ள டோம் நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட பனிக்கட்டியினை கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பனிப்பட்டறையானது ஆறு மாத காலத்திற்கு நிலைத்திருக்கக்கூடியதெனவும்; அதன் பின்னர் பனியானது கரைய ஆரம்பிக்கும். அது மீண்டும் புதிதாக



அமைக்கப்படும். இந்த ஐஸ் ஹோட்டலின் விஷேசத் தன்மை என்னவெனில் அதன் சுவர்கள், பட்டறை, மேசைகள், கண்ணாடி பாத்திரங்கள் ஆகிய அனைத்துமே பனிக்கட்டியினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன என்பதுதான்.

### உலகிலே மிக உயரமான தொடர்மாடித் தொகுதி!

உலகில் மிக உயரமான தொடர்மாடித் தொகுதியானது தற்போது அவுஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. அது 80 மாடிகளையுடைய 527 வீடுகளுடன் கூடிய கட்டிடமாகும். புகழ்பெற்ற தங்கக் கடற்கரை ஓரத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற இந்த கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர்; உலகத்திலேயே மிக உயரத்தில் உள்ள வீடாக இதன் மேல் மாடித் தொங்கலில் அமைக்கப்படும் வீடே திகழும் என்று கூறப்படுகிறது.



### மருத்துவ பரிசோதனைக் குழல்!

**கி.பி.** 1800க்கு முன் மருத்துவர்களுக்கு நோயர்ளரின் இதயத் துடிப்பினை சரியான முறையில் கண்டறிவதற்கு இக்காலத்தில் உள்ளது போல் பரிசோதனைக் குழல் இருக்கவில்லை. அக்காலத்தில் நோயாளரை படுக்க வைத்து நெஞ்சினில் காது வைத்தே இதயத் துடிப்பு பரிசோதிக்கப்பட்டது. ஆண்-பெண் இருதரப்பாரும் இவ்விதமே பரிசோதிக்கப்பட்டனர்.



ஆனால், 1816ல் பிரான்ஸ் நாட்டு மருத்துவரான 'ரெனி தியோபிலி ஹயசிந்தி லெனெக்' என்பவரிடம் சிகிட்சை பெறுவதற்காக அழகான பெண்ணொருவர் பரிசோதனைக்காக தனது சட்டையினை கழட்டுவதற்கு முன்வரவில்லை. ஆனால், கட்டாயம் இதயத் துடிப்பினை பரிசோதிக்க வேண்டியிருந்தது. அந்தப் பெண்ணினது மறுப்பின் காரணமாக இந்த மருத்துவருக்கும் சிறிது வெட்கம் ஏற்பட்டது; அதன் பின் அவர் ஓர் உத்தியினை கையாண்டார். மட்டையொன்றினை எடுத்து குழாயினைப் போன்று சுருட்டி அமைத்து ஒரு முனையை அப்பெண்ணினது மார்பின் நடுவில் வைத்து மறுமுனையில் தனது காதினை வைத்து அவளது இதயத் துடிப்பினை பரிசோதித்தார். அந்தப் பெண்ணும் அதனை மறுக்கவில்லை. மருத்துவருக்கும் இதயத்துடிப்பானது முன்னர் காட்டிலும் தெளிவாகக் கேட்டது. இப்படித்தான் ஸ்டெதஸ் கோப் உருவானது.

### மாரி ம(ர)ழை

இ. நளீம்-மூதூர்.

அகதிகளென
முத்திரை குத்தப்பட்ட
ஏழை மக்களின்
சிறு குடிசைகள்
ஆங்காங்கே!
கோடை வெயிலையே
தாங்க முடியாத
ஏழைக் குடிசை மக்கள்
மாரி மழையை
எப்படித் தாங்குவோரோ!

எட்டுப் பிள்ளைகளோடு
எங்கே ஒதுங்குவது
வேறு வழியில்லை
இங்கேதான்
உறங்க வேண்டும்
நனைந்த
ஈரத் தரையின் மேல்!

எமது துயரை
யாரிடம் சொல்ல
அரசாங்கத்திடமா
அரசியல்வாதிகளிடமா
அரசாங்கத்திடம் சொல்ல
எங்களுக்கு பலம் இல்லை
அரசியல் வாதிகளிடம்
சொல்லி
எங்களுக்கு பலனில்லை!
வேறு வழியில்லை
ஒதுங்குவதற்கு
இக் குடிசையைத் தவிர.

முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்

முஸ்லிம் அரசியலில் ஆர்வம் கொண்டவர்கள் வாசித்தறிய வேண்டிய அவசியமான ஆவணம்! புத்தகம் தேவைப்படுவோர், முஸ்லிம் குரல் ஆசிரியர் பீடத்துடன் தொடர்பு கொள்ளலாம்!



விலை 200/=

தபாலில் அனுப்பிவைக்கப்படும்!

-Advt-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைகள் சொன்ன தாத்தா!

பண்டைய கிரீஸ் நாட்டில், அடிமைகளை ஏலம் விடும் சந்தை ஒன்றில் இளம் அடிமை ஒருவர் இருந்தார். அவருடன் இன்னும் சில அடிமைகளும் இருந்தனர். அந்த இளம் அடிமைக்குத் தனது அடிமை வாழ்வு பிடிக்கவில்லை. சுதந்திர மனிதனாகவே அவர் வாழ ஆசைப்பட்டார். ஆனாலும், தன் மனம் விரும்புவதை, நான்கு பேரிடம் சொல்லி ஆறுதல் பெற விரும்பினார் அவர்.

அவர் தனது சக அடிமைகள் சிலரிடம் தன் மனதில் இருந்த சுதந்திர வேட்கையை எடுத்து உரைத்தார். அவருடைய பேச்சும் கருத்தும் மற்றவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. எல்லோரும் அவர் தலைமையில் ஒரு குழுவாகவே சேர்ந்து விட்டனர்.

அவர்கள் எல்லாரும், அடிக்கடி உரத்த குரலில் பேசிக்கொண்டு இருப்பார்கள். "நாமும் என்ன... மனிதர்கள் தானே? எல்லோரையும் போல் தானே, நமக்கும் கை, கால்கள் இருக்கின்றன? பிறகு ஏன், நம்மை மட்டும் ஆடு, மாடுகளைப் போல நடத்த வேண்டும்....?" என்று புலம்பினார்கள்.

இதெல்லாம் எப்படியோ ஊரின் செல்வந்தர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவர்களுக்கு பெரும் கவலை.... ஏனெனில், அவர்களின் செல்வ நிலையும் வியாபாரமும் அந்த அடிமைகளின் உடல் உழைப்பை மட்டுமே நம்பியிருந்தன. அத்தகைய அடிமைகள் போராடி விடுதலை பெற்றுச் சென்று விட்டால், அவர்களின் வேலைகளுக்கு ஆள் இல்லாமல் போய்விடும் அல்லவா?

எனவே, அடிமைகளின் எதிர்ப்பை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். என்று செல்வந்தர்கள் நினைத்தனர். எல்லாக் குழப்பங்களுக்கும் காரணம், அந்த இளம் அடிமைதான் என்று கண்டுபிடித்துவிட்டனர். இனி மற்றவர்களை அவருடன் சேரவிடக் கூடாது என்று முடிவு செய்தனர். அதற்கு ஒரே வழி அந்த இளம் அடிமையைத் தனிமைப்படுத்தி வைப்பது தான் என்று தீர்மானித்தனர்.



ஆகவே, அவரைத் தரதர என்று இழுத்துச் சென்று, சிறையில் அடைத்து விட்டனர். அந்த இடம் இருட்டறை, மூச்சுவிடக் கூட காற்று வராது, நல்ல வெளிச்சமும் கிடையாது. அதில் வைத்து வெளியில் பூட்டிவிட்டனர்.

அவர் அச்சிறு அறையில் முடங்கிப்போனார். உணவு கூடச் சரியாகக் கொடுப்பது கிடையாது. நல்ல உறக்கமும் இல்லை. எப்போது பகல், எப்போது இருட்டு என்பது கூடப் புரியாது. இப்படியாக நாட்கள் நகர்ந்தன. மெல்ல மெல்ல அந்த இளைஞர் முதுமை அடைந்தார். மிக நீண்ட காலத்துக்குப் பிறகு, வயதாகிவிட்ட அவர், முதுமையின் தள்ளாட்டத்தில் தடுமாறுகிறார் என்பதை உணர்ந்த செல்வந்தர்கள், விடுதலை பெற்றால்கூட இனி அவரால் எதையும் சாதித்துவிட முடியாது எனக் கருதி அவரை விடுதலை செய்தனர்.

வெளிவந்தவருக்கு கிழக்கும் தெரியவில்லை. மேற்கும் புரியவில்லை. கண்பார்வை சரியில்லை. காதும் கேட்கவில்லை. தலை முடியும் தாடியும், தூய பஞ்சாக நரைத்துவிட்டன. அவர் தன் நண்பர்களைத் தேடிச் சென்றார். எவரும் கண்ணில் படவில்லை. அவர்கள் எல்லாரும், செல்வந்தர்களின் கொடுமைகளுக்குப் பயந்து போய்த் தப்பித்து எங்கோ ஓடிவிட்டனர்!

கடைசியில், ஆதரவற்ற நிலையில், பிச்சைக்காரனைப் போன்று வீடுவீடாகச் சென்றார். பெரியவர்கள் அவரைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், குழந்தைகள் ஓடி வந்து, அவரைச் சூழ்ந்து கொண்டனர். 'தாத்தா.... தாத்தா....' என்று அன்போடு அழைத்து மகிழ்ந்தனர்.

அடிமைத் தாத்தாவும் அன்போடு அவர்களை வாரி அணைத்துக்கொண்டார். அவர்களைத் தன்னைச் சுற்றி அமர்த்திக் கொண்டு, நீதி போதனைகள் மிகுந்த நல்ல நல்ல கதைகளைக் கூறினார். அவர் கூறும் கதைகளைக் குழந்தைகள் பெரிதும் விரும்பினார்கள். அவரை எப்போது, எங்கு பார்த்தாலும் உடனே அருகில் ஓடிவந்து, கையைப் பற்றிக் கொண்டு "தாத்தா, தாத்தா... கதை சொல்லு.. கதை சொல்லு.." என்று உரக்கக் கூச்சலிட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வார்கள்.




தாத்தாவும் எப்படியும் தினம் ஒரு புதுக்கதை வீதம் இட்டுக் கட்டிக் கூறிவிடுவார். சில கதைகள் மனதுக்கு உருக்கமாக இருக்கும். வேறு சில நகைச்சுவையாக இருக்கும் அவற்றைக் கேட்டும் குழந்தைகள் ஆனந்தக் கூத்து ஆடினார்கள். தாத்தாவிடம் கேட்ட கதைகளைக் குழந்தைகள் தமது வீடு சென்று, அவரவர் அப்பா, அம்மாவிடம் சொன்னதைக் கேட்டு அவர்களும் ஆனந்தம் அடைந்தனர்.

நாளடைவில், அந்தத் தாத்தாவின் கதைகள் நாடு முழுவதும் பரவிப் பிரபலம் அடைந்துவிட்டன. ஒருகாலத்தில் எந்த அடிமை இளைஞனின் விடுதலை வேட்கை வெளியில் பரவிவிடக்கூடாது என்பதற்காக அவரை இருட்டறையில் அடைத்து வைத்தார்களோ... அதே இளைஞன் அங்கிருந்து முதியவராக வெளிவந்து அந்த ஊர்க் குழந்தைகள் மூலமாகக் கூறிய எண்ணற்ற கதைகள் உலகம் முழுவதும் பரவி, இன்றும் அவருடைய புகழைப் பரப்பிக்கொண்டு இருக்கின்றன.

அந்தக் கதைகளைக் கூறிய அடிமைத் தாத்தா ஈசாப், அவர் பெயராலேயே, அந்தக் கதைகள் 'ஈசாப் கதைகள்' என அழைக்கப்படுகின்றன.

## தெரிந்து கொள்ளுங்கள்

# நேரகாலத்தினை சேமித்து வாழ்வில் வெற்றி பெறுவோம்!



காலம் என்றால் என்ன? அதுவும் எமது வாழ்வினைப் போன்று பெறுமதிமிக்க ஒன்றாகும். வாழ்க்கையினை கழித்த விதம் மற்றும் கழித்த வாழ்வின் காரணமாக அடுத்தவர்கள் அடைந்த நன்மைகள் ஆகியவற்றினை கருத்தில் கொண்டதன் பின்பே அந்த வாழ்வினது பெறுமதியானது வளமிக்கதாகும்.

அப்படியாயின் அந்த நடவடிக்கைகளுக்காக காலத்தினை ஒதுக்கிய விதமே முக்கியமானது. ஏழை பணக்காரன், ஆண் பெண், சிறியோர் பெரியோர். கற்றவர் பாமரர் ஆகிய அனைவருக்குமே ஒரு நாளில் 24 மணித்தியாலங்களே உள்ளன. வருடத்திற்கு 365 நாட்களே உள்ளன.

ஆனால், இந்த காலத்தினை பயன்படுத்தும் விதத்தினைப் பொறுத்து சிலரது 01 மணித்தியாலமானது வேறு சிலருக்கு ஒரு நாளினைக் காட்டிலும் நீண்டதாக இருக்கும்; பெறுமதிமிக்கதாக இருக்கும். பெற்றுக்கொண்ட பயனும் அதிகூடியதாகும்.

வாழ்க்கை என்பது ஒருவித ஒப்பந்தமாகும். அது ஒரு பொருளினை எடுத்துச் செல்லும் வாகனத்திற்கு ஒப்பானதாகும். ஆகவே. அந்த ஒப்பந்தத்தின் மூலம் அதிகபட்ச இலாபத்தினை பெறுவதற்கும், அதன் மூலம் அதிகபட்ச பயனைப் பெறுவதற்கும் எம்மால் முடியுமெனில் அதுவே எமது வெற்றியாகும்.

# உலகில் மிக நீளமான சுரங்கப்பாதை!



நோர்வே இராஜ்ஜியத்திலேயே உலகில் மிக நீளமான சுரங்கப்பாதை அமைந்துள்ளது. 24.6 கிலோ மீற்றர் நீளமுடைய இந்தப்பாதை அந்நாட்டின் கிழக்கையும் மேற்கையும் இணைக்கிறது. இப்பாதையை அமைப்பதற்கு 113.1 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

பனியால் மூடப்பட்ட உயர்ந்த மலையின் ஊடாகவும். களப்பு ஒன்றின் ஊடாகவும் அமைந்துள்ள இந்தப் பாதையானது ஒஸ்லோவையும் பர்கன் எனும் நகரத்தையும் இணைக்கிறது. இது லெடார் சுரங்கப்பாதை என்று அழைக்கப்படுகிறது. நோர்வே நாட்டு ஹாடே மன்னரினால் இந்தப்பாதை திறந்து வைக்கப்பட்டது.

தீ விபத்துக்களை தவிர்க்கும் முகமாக இந்த சுரங்கப்பாதையில் அதிஉயர் தொழிநுட்பத்துடன் கூடிய உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த சுரங்கத்தின் சுவர் தீப்பற்றாத பொருட்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. அவசரமாக வாகனங்களை வெளியேற்றுவதற்கு 48 இடங்களும். வாகனங்களை திருப்புவதற்காக 15 இடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று ஒவ்வொரு 114 மீற்றர் தூரத்திலும் தீயணைக்கும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது.

# வாழ்வின் பரிசுகள்



கல்வியின் பரிசு அறிவு
கவிஞனின் பரிசு கவிதை

மழலையின் பரிசு புன்னகை
மலரின் பரிசு வாசனை

சீற்றத்தின் பரிசு அறியாமை
சீதனத்தின் பரிசு மடமை

இரவின் பரிசு நிலவு
இதயத்தின் பரிசு தேடல்

தென்றலின் பரிசு புயல்
தாயின் பரிசு அன்பு

பொறுமையின் பரிசு வெற்றி
பெருமையின் பரிசு கர்வம்

வாழ்வின் பரிசு சோதனை
வினாவின் பரிசு விடை

இ. நிக்ஸானா
ஆண்டு - 05
மூதூர் முஸ்லிம் பெண்கள் கல்லூரி

# மலேரியாவினை ஒழிப்போம்!




நுளம்புகளின் அச்சுறுத்தல் காரணமாக குடியேற்றங்கள் அழிந்து போன சம்பவங்கள் மானிட வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. அமேசன் நதித்தீரத்தில் வாழ்ந்த ஆதிக்குடிகளே முதன் முதலாக இந்த மலேரியாக் கொள்ளை நோய்க்கு இரையாகியுள்ளனர். மலேரியா கொள்ளை நோயானது தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமன்றி அபிவிருத்தியடைந்த நாடான அமெரிக்காவினைக்கூட அச்சுறுத்தலாகக்கியுள்ளது. மலேரியா காரணமாக நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களையும் நிறுத்தி வைக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த நோய் நிலையானது வெப்ப வலய நாடுகளுக்கு மட்டுமன்றி அனைத்து நாடுகளுக்கும் ஒரே விதமான பாதிப்பினை ஏற்படுத்தும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. விஞ்ஞான முன்னேற்றத்துடன் 'அனோபிலிஸ்' எனும் நுளம்பிலிருந்தே மலேரியா பரவுகிறது என கண்டுபிடிக்கப்பட்டது. இதுதான் மலேரியாவை பரப்பும் காவியாகும். மலேரியா நோய்க்கு ஆட்பட்டவரிடமிருந்து ஏனையோருக்கு இந்த வைரசினை இந்த நுளம்பே பரப்புகிறது. இலங்கையில் அதிகளவிலான மலேரியா கொள்ளை நோயானது வடக்குக் கிழக்கு பிரதேசங்களிலேயே உள்ளது. அதற்குப் புறம்பாக அம்பாந்தோட்டை, மொனராகல, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பரவுகிறது. மனித குலத்தை அச்சுறுத்தும் மிகப்பெரும் நோயாக இது உள்ளது. நுளம்புகள் மனிதனை அழிக்கும் வல்லமையைக் கொண்டுள்ளதை நாம் உணர்கிறோமா?



# பற்களைப் பாதுகாக்கும் கல்சியம்!



பற்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும், பளபளப்பாக வைத்துக்கொள்வதற்கும் விரும்பாதோர் ஒருவருமிலர். இதற்கான ஆர்வம் உங்களிடமிருப்பின் ஒரு நாளைக்கு 800 மில்லிகிராம் கல்சியத்தினை நீங்கள் உட்கொள்ள வேண்டும். நியூயோர்க் பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்போது இது தெரியவந்துள்ளது. இவ்வாறு கல்சியம் உட்கொள்பவர்களுக்கு பல் சம்பந்தமான நோய்கள் குறைவு என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பால், யோகட் மற்றும் அனைத்துவிதமான பால் உற்பத்திகளிலும், பச்சை நிற காய்கறிகளிலும் அதிகளவில் கல்சியம் அடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணியின் சகல துறை ஆட்டக்காரர் - மஹ்ரூப்!

**கொழும்பு** வெஸ்லி கல்லூரியிலிருந்து இலங்கை கிரிக்கட் அணியில் இடம்பிடித்துள்ள முதலாவது வீரர்தான் பர்வேஸ் மஹ்ரூப். 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட இலங்கை அணியின் தலைவராகவும் கடமையாற்றிய மஹ்ரூப் சகலதுறை ஆட்டக்காரராவார்.



இலங்கை அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் ஓய்வுபெற்றதற்குப் பின்னர் அவரது இடத்தினை பர்வேஸ் மஹ்ரூப் ஈடுசெய்ய முடியும் என கிரிக்கட் ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. இருபது வயதான மஹ்ரூப் பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு போன்ற சகலதுறைகளிலும் தன்னை ஸ்திரப்படுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 28 இலட்சம் பேருக்கு அடையாள அட்டை வழங்க விஷேட பிரிவு!

**அடையாள** அட்டை இதுவரைக்கும் பெற்றுக் கொள்ளாத 28 லட்சம் பேருக்கு 2005ம் ஆண்டு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. அதற்கான விஷேட பிரிவொன்றினை அமைத்து ஒரு நாளைக்கு 15000 அடையாள அட்டைகளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சட்டம் மற்றும் மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

சிறந்த விஷேட பிரிவினை அமைப்பதற்கு நான்கு மில்லியன் செலவு ஏற்படுமெனவும்: புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மாற்றத்திற்குள்ளாகாத வாறான அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. ஏற்கனவே 25 லட்சம் பேருக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த திலக் ரணவிராஜா எதிர்வரும் வருடத்தில் புதிதாக மூன்று இலட்சம் பேர்கள் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு தகுதியுடையோர் ஆவார்கள் என்றும் தெரிவித்தார்.



இலக்கினை அடைவதற்கான ஆட்பதிவுத் திணைக்களத்தின் கீழ் விஷேட 15 பிரிவுகள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு நாளைக்கு 1000 அடையாள அட்டைகள் வீதம் வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். புதிதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டைகளுக்காக மீள்வரல் செலவாக 100 ரூபாய் வரையில் அறவிடப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர்: மக்கள் மீது அதிகசுமையினை ஏற்றாத விதத்தில் இந்த நடவடிக்கையானது செயற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மற்றும் மலையக மக்களுள் 15 சதவீதமானோரிடம் அடையாள அட்டைகள் இல்லை; அவர்களுக்குத் தேவையான அடையாள அட்டைகளை வழங்குவது தொடர்பாக ஏற்கனவே தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் 148 பாடசாலை பிள்ளைகளின் கல்வி இடைநிறுத்தப்பட்டுள்ளது!

**கிளிநொச்சியிலுள்ள** பாடசாலைப்பிள்ளைகளில் 3741 பேர் கிரமமாக பாடசாலைக்கு செல்வதில்லையென்று ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. அவர்களுள் 1957 மாணவர்களும்; 1754 மாணவிகளும் அடங்குவர். இவர்களுள் 88 மாணவர்களும் 60 மாணவிகளும் முழுமையாக பாடசாலைக்குச் செல்வதில்லை என்றும் ஆய்வின்போது தெரிய வந்துள்ளது.

இடம்பெற்ற போர்ச் சூழலினால் விளைந்த பொருளாதாரமற்றும் சமூக நிலைமைகள் வீழ்ச்சியுற்ற பிரதேசங்களிலுள்ள பாடசாலை செல்ல வேண்டிய வயதிலுள்ள பிள்ளைகள், இதுவரை பாடசாலை செல்ல முனையவில்லையென கல்வி அலுவலக உயரதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# ஈகைப் பெருநாள்!

மௌலவி: எம்.ஆர்.எம். ஹலீறுல்லா நாபாவெளை.



**ஈத்முபாறக்!** ஈத்முபாரக்! மன மகிழ்ச்சி ததும்பும் வாழ்த்தொலிகள்; பெருநாள் பிறைபார்த்த மறுகனமே சந்தோஷமும் குதூகலமும் தொற்றிக் கொள்கின்றன. இஸ்லாமியரிடையே நோன்புக் கடமையை செம்மையாய் நிறைவேற்றிய களிப்பு மட்டுமல்ல ஒரு மகத்தான மாதத்தை அனுபவித்து, கடந்து வந்த மனநிறைவின் எதிரொலியே

இம்மகிழ்ச்சி. உலக மக்கள் அனைவரையும் உய்விக்கவும், மனிதன் மனிதனாக சுய கௌரவத்துடன் இம்மையின் இன்பங்களை பரிபூரணமாக அனுபவித்து விட்டு புனிதமான மறுமை வாழ்க்கைக்குப் பாதையமைத்துக் கொடுக்கவும், இறைவனால் அருளப்பட்ட இறைமறை இறங்கிய இம்மாதத்தை எவர் அடைகிறாரோ அவர் அம்மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும் (2:185) என்ற இறைவசனத்தின் மூலம் நோன்பு நோற்கக்கட்டளையிட்டான் இறைவன்.

ஐம்புலன்களையும் அடக்கி, இறைவனின் கட்டளைப்படி நோன்பு நோற்று இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளில் ஒன்றை நிறைவேற்றி இறைவனின் பேரருளின் மூலம், ரமழான்மாத நோன்பு வெற்றிகரமாக நிறைவேற்றிய மறுநாளை சந்தோஷம் பொங்கும் பெருநாளாகக் கொண்டாடப் பணித்தார்கள் பூமான் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள்.

ரமழான் பெருநாளைக்கு ஈதுல் பித்ர் ஈகைப் பெருநாள் எனும் பெயர்களுமுண்டு. பிறர் நலன் பேணும் சகோதரத்துவத்துக்கு வித்து ஈகைதானே! பணம் படைத்தவர்களைப்போல ஏழைப் பெருமக்களும் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் எனும் உயரிய குறிக்கோளுடன் உருவானதே 'பித்ரா' இதைப் பெருநாள் தொழுகைக்குச் செல்லமுன்னதே கொடுத்துவிடவேண்டும். குர்ஆனில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தொழுகுங்கள், ஸக்காத். கொடுத்து வாருங்கள் (2:43) கோமான் நபி (ஸல்) அவர்கள் ஸக்காத் கொடுக்காதவனின் தொழுகை பூரணத்துவம் அடையாது எனும் பொருள் பட இயம்பியுள்ளார்கள். அல்ஹம்துலில்லாஹ்!

பெருநாள் பிரார்த்தனை: இறைவா, நாங்கள் உன்னிடம் உயர்ந்த வாழ்வையும் சிறந்த மரணத்தையும் கோருகிறோம். மேலும் இழிவும், கேவலமும் அடையாமல் உன்னிடம் திரும்புவதை விரும்புகின்றோம். இறைவா எங்களுக்குத் திடீர் மரணத்தைத் தந்து நீ எங்களை அழித்து விடாதே. மரண உபதேசம் செய்ய முடியாமலோ, பிறரின் உரிமையைச் செலுத்த முடியாமலோ இருக்கும் நிலையில் எங்களைத் துரிதமாகப் பிரித்து விடாதே.

இறைவா தூய்மையையும், பிறரிடம் தேவைப்படாமையையும், ஸ்திரத்தன்மையையும், நேர்வழியையும், இம்மை மறுமைக்கான நலவுகளையும் உன்னிடம் வேண்டுகிறோம். இறைவா சந்தேகம், மாறுசெய்தல், உன்மார்க்கக் காரியங்களில் பிறர் மெச்சச் செய்தல் (ரியா) ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறோம்.

மனங்களை மாற்றக் கூடியவனே! நீ எங்களை நேர்வழியில் செலுத்தி பிறகு எங்கள் மனங்களை கோணலாக்கி விடாதே: எங்களுக்கு விசேஷமாக உன்னிடமுள்ள கிருபையைச் சொரிவாயாக! நிச்சயமாக நீயோ மிகப்பெருங்கொடைவள்ளலாக இருக்கின்றாய் (திப்ரானி) இறுதி நபியவர்களின் பிரார்த்தனையை நெஞ்சாற உணர்ந்து பிரார்த்திக்கின்றோம். வல்ல இறைவன் இவற்றை என்றென்றும் அமுல்படுத்தும் மனத்தின்மையையும், உறுதியையும் நமக்குத் தந்தால் நம்மைவிட ஏற்றமிகு சமூகம் இவ்வுலகில் யாருமே இருக்க முடியாது. பொறுமையுடனும், விவேகத்துடனும் ஒவ்வோர் இஸ்லாமியனும் செயல்பட்டு அவன் சார்ந்துள்ள இந்த மேன்மையான சமூகத்துக்கும் பெருமை சேர்ப்பானாக. ஆமீன்!

ரமழான் பெருநாளைக் கொண்டாடும் எல்லோருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.....

உங்கள் வியாபாரஸ்தலங்களுக்குத் தேவையான மணம், சுவை நிறைந்த தயாரிப்புகளான தேயிலை வகைகள், சீரகம், ஏலம், கறுவா, மிளகு, மாசி, மாசிச்சம்பல், நீலம், பத்தி வகைகள் என்பனவற்றை உங்கள் அளவுக்கேற்றாற்போல் பக்கட்டுக்களில் அடைத்து விற்பனை செய்யும்...



பவாஸ் மார்க்கடிங்
76, அல்–பாத்திமியா வீதி, அக்கரைப்பற்று–01
077 6550136
0777 246701
Advt

## ஒப்பந்தக்காரர்கள் புலிகளினால் விரட்டியடிக்கப்படுகின்றனர்!



**வடக்கில** அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் புலிப் பயங்கரவாதிகளினால் விரட்டியடிக்கப்பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த ஒப்பந்தக்காரர்கள் ஊடாக கருணா தரப்பினர் வன்னியில் ஊடுருவக்கூடும் என்ற அச்சத்தினாலேயே புலிகள் இவ்வாறு செயல்படுகின்றனர். புலிகளுக்குச் சார்பான ஒப்பந்தக்காரர்கள் மட்டும் தங்க வைக்கப்பட்டு ஏனையோர் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் தொழில் புரிந்த சிலரை புலிகள் கைது செய்திருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2004 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கந்தளாய் அல்தாரிக் மகா வித்தியாலய மாணவர்கள்!




**2004ம்** வருடம் நடைபெற்ற தரம் 05ற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் கந்தளாய் தி/அல் தாரிக் மகா வித்தியாலயத்தில் ஒன்பது மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். எஸ். மனாசிர் ஹுஸைசன்–152, எம்.எம். சப்ரான்–147, எம்.ஆர்.எம். சபான்–142, எம்.சி. ஜமீசுள்ளா–140, எம். பாத்திமா பெரோஸா–135, எம்.எம். நப்ராஸ்,–135, எம். சப்ராஸ்–129, எஸ். சாஜத்கான்–127, ஜீ.எம். ஆசிக்–126, ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். சித்தியடைந்த ஒன்பது மாணவர்களையும்: பயிற்றுவித்த ஆசிரியரையும் படத்தில் காணலாம்.

(தகவல்: முர்ஷித், கந்தளாய் செய்தியாளர்)

முஸ்லிம் குரல் பத்திரிகைக்கு நாடு முழுவதிலுமிருந்து செய்தியாளர்கள், விற்பனையாளர்கள் தேவை!
தொடர்புகளுக்கு...
உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
119/15, Vivian Gunawardana Mawatha, (Kethampahuwa Road), Wellampitiya.
Tel : 071 4105877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக்கொடுக்கும்போது

# அடிக்காதீர்கள்!

**சமீபத்தில்** அமெரிக்காவில் பாடசாலைகளில் மந்தமாக இருக்கும் குழந்தைகளைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நடாத்தப்பட்டுள்ளது. 110



தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக் கொடுப்பதை ஆறு மாதங்கள் தொடர்ந்து ஆய்வாளர்கள் கண்காணித்துள்ளனர். இதில் பெற்றோர்களால் அடித்து, திட்டி, கண்டித்து பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்ட குழந்தைகள் பாடசாலையில் மிகவும் மோசமான நிலையில் இருந்துள்ளனர். ஆனால், குழந்தைகளின் பிரச்சினையில் தலையிடாமல்; அவர்களுக்குப் புரியும்படி விளக்கிக் கூறி தட்டிக்கொடுத்து பாடம் சொல்லிக்கொடுக்கப்பட்ட குழந்தைகள் பாடசாலையில் அபார வளர்ச்சியுடன் காணப்பட்டார்களாம். முதல் நாள் தாய் கோபமாகவோ, எரிந்தோ காணப்படின் அடுத்தநாள் அந்தப் பிள்ளையின் செயற்பாடு பாடசாலையில் மோசமான நிலையில் காணப்பட்டதாம். குழந்தைகளுக்கு மேலும் மேலும் தண்டனைகள் கொடுப்பது அவர்கள் இருக்கும் நிலையிலிருந்து கீழ் நிலைக்குத்தான் தள்ளப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே தாழ்வு மனப்பான்மையில் இருக்கும் அவர்களுக்கு இந்தத் தண்டனைகள் மோசமான எதிர்காலத்தைத் தான் உருவாக்குகின்றனவாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.



# வாழ்க்கையின் புனிதத்தை உணர வேண்டும்!



**நாம்** செய்யும் வேலை எதுவாக இருந்தாலும் அதில் உள்ள புனிதத் தன்மையை உணர்ந்து செய்தால் சக்தி பெருகும் நமது வாழ்க்கையில் ஏற்படும் பணப்பற்றாக்குறை எப்போதும் நம் சக்தியை உறிஞ்சக் கூடிய ஒரு விஷயம் தான். ஆனால் அதை நிவர்த்தி செய்ய சேமிப்பு, அதிகப்படியான உழைப்பு என்பனவற்றை மேற்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யும் போது நம்மையறியாமல் சக்தி பிறக்கும். வாழ்க்கையில் கடன்கள் இருக்குமானால்; கடன்களை முதலில் குறைக்க வேண்டும். கணவனும் மனைவியும் கலந்தாலோசித்து, குடும்பச் செலவில் முடிந்தவரை 10 முதல் 20 சதவீதம் சிக்கனம் பிடித்து, அதன் மூலம் கடனைச் சிறிது அடைக்க முயலவேண்டும். கடனை ஒருபுறம் அடைத்துக் கொண்டிருந்தாலும் வருமானத்தின் 10 சதவீதமானது நீண்டகாலச் சேமிப்பாக போட வேண்டும். நாம் செலவு செய்யும் முறையில் தவறு உள்ளதா? என்பதைக் கண்டறிந்து தவறு இருந்தால் திருத்திக் கொள்ளா விட்டால், எதிர்கால பாதுகாப்பிற்கு பங்கம் வந்து விடும். குடும் பத்தின் அத்தியாவசிய தேவையைப் பொறுத்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் உபாயம் பற்றி விழிப்புணர்வு கொள்ள வேண்டும்.

## ஈத் முபாறக் மிபீசீகள் காட்!

இழுத்து அடைத்துக் கொள்
மெதுவாக
இந்த
இசைபாடும் கதவின் அறையினை

இதயம் என்பது
சில நேரங்களில்
அடைத்து வைக்கப்படவேண்டிய
ஒன்றாகும்
என்கிற படியால்,

சென்ற வருடம்
இதே நாளில்
நீ பேசிய வார்த்தைகள்
கள்ளப் பூனைபோல்
எட்டிப்பார்க்கும் வெளியே.
இழுத்து அடைத்துக்கொள்
மெதுவாக இந்தஇசைபாடும்
கதவின் அறையினை.

மருதாணிப் புள்ளிகள்
அமர்ந்திருக்கும்
உன் கரங்களில்
ஈச்சம்பழம் ஏந்தி வா.

அன்றைய தினத்தில்
எந்தன் புதுஆடை மணத்ததில்லை
உன்னை விட.
எந்த மிட்டாயும் இனித்ததில்லை
உன் பார்வைகளைவிட.

கடித உறையொன்று
உதடு விரிக்கிறது
உன் புன்னகையை ஞாபகப்படுத்தி.

நோன்பு இருபத்தேழில்
உன்னைப் பெண் பார்க்க
வருவதாகவும்,
பெருநாள் முடிந்து
உனக்கு திருமணம் என்றும்
எழுதியிருந்தது.
அதன் கீழ் உள்ள
கவிதைகளை
படித்ததில்லை நான்
என்கிற படியால்;

தாய்
என் தலை தடவி
உறங்கியதில்லை நான்
என்கிற படியால்,
அன்றைய தூக்கத்தில்
கட்டிலுக்கு கீழ் உள்ள பாத்திரத்தில்
கொட்டி வைத்திருக்கிறேன்
உன் முகத்தையும்
மௌனத்தையும்

விடிந்தால் நோன்புப் பெருநாள்
வரவா உன் வீட்டிற்கு
பசு மாட்டிற்கும்
கோழிக்கறியுடன்தான்
சோறு கொடுப்பாயாமே நீ.

-பொத்துவில் பைசால்-

"**அல்லாஹ்வும்** அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப் பற்றிக் கட்டளையிட்டுவிட்டால் அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ எந்தப் பெண்ணுக்கோ உரிமையில்லை. ஆகவே அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறுசெய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலே இருக்கின்றார்கள்" (அல்குர்ஆன் – 33:36) இந்த வசனத்தின் படி எந்த இபாதத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அல்லாஹ்வும் அவனின் தூதரும் சொல்லி இருக்கும்போது அதிலே மாற்றம் செய்வதை இட்டு நாம் மிகவும் கண்டிப்பாகப் பயந்து கொள்ள வேண்டும். இன்று எம்மத்தியிலே மார்க்கம் என்ற பெயரிலும் நன்மை என்ற பெயரிலும் எவ்வளவோ வணக்கங்கள் காணப்படுகின்றன. அவைகளில் ஒன்றுதான் ஸுபஹ் தொழுகையில் ஓதப்படும் குனூத் ஆகும்.

# குனூத் ஒரு நோக்கு!

எம்.ஏ. இனாயத்துல்லாஹ், திக்குவல்லை

நான் வித்ருடைய குனூத்தில் ஓதுவதற்காக "அல்லாஹும்மஃதினி பீமன்ஹதைத்த வஆபினி பீமன் ஆபைத் வதவல்லனீ பிமன்தவல்லைத் வபாரிக்லி பீமன் அஃதைத் வகினி ஷர்ரமாக்களைத் இன்னக தக்ளி வலாயுக்லா அளைக் இன்னஹு லாயெதில்லு மன்வாளைத்" என்று எனக்கு நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்துள்ளார்கள். (அறிவிப்பவர் ஹஸன். நூல் : அபூதாவூத், இப்னு மாஜா, ரஸயி, அஹ்மத்) இந்த ஹதீஸை மையமாக வைத்து அனைத்து முஹத்திஸீன்களும் வித்ரில் குனூத் ஓதுவதுதான் ஸுன்னத்தாகும் என்றதனால் வித்ரில் குனூத் ஓதப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் "பிஃறும ஊனா" என்ற இடத்தில் நபித்தோழர் 70 பேர்களைக் கொலை செய்தவர்களுக்கு பாதகமாக ஒரு மாதம் குனூத் ஓதினார்கள். நபி (ஸல்) அவர்கள் ஐந்து வக்திலும் குனூத் ஓதியதாகவே பல ஹதீஸ்கள் கூறுகின்றன. எனவே குனூத் ஓதுவதாயின் ஐவேளையும் ஓதப்படவேண்டும். இன்று அவ்வாறில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏன் குனூத் ஓதினார்கள்? ஸஹாபாக்கள் 70 பேரையும் கொலை செய்த அந்த நபர்களுக்குப் பாதகமாக நபிகளார் குனூத் ஓதி, இவர்கள் மீது உன் சாபத்தை ஏற்படுத்துவாயாக! என அல்லாஹ்விடம் வேண்டினார்கள். அப்போது "நபியே உமக்கு அதிகாரத்தில் எந்தப் பங்கும் கிடையாது" (3:128) என்ற குர்ஆன் வசனம் உடனே இறங்கியது. (அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி), நூல் : புகாரி, அஹ்மத்) ஸுபஹில் பிறரைச்சபித்து குனூத் ஓதியபோது அல்லாஹ் அதைக் கண்டித்து ஒரு வசனத்தை அருளினான். எனவே அல்லாஹ்வின் கட்டளைப்படியே நபி (ஸல்) அவர்கள் குனூத்தை விட்டுவிட்டார்கள் என்பது தெளிவாகின்றது.

மற்றுமொரு ரிவாயத்தில் ஸுபஹ் தொழுகையில் மட்டும் மரணமடையும் வரை குனூத் ஓதிக்கொண்டே இருந்தார்கள் என அனஸ் (ரலி) அறிவிக்கும் செய்தி பைஹகீ, தாரகுத்னி ஆகிய நூல்களில் பதிவாகியுள்ளது. இதுதான் ஸுபஹ் தொழுகையில் குனூத் ஓதுபவர்களுக்கு உள்ள ஆதாரமாகும். இருந்தாலும் இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமற்றது. இதன் அறிவிப்பாளர் வரிசையில் அபூ ஜஃபர் ராஸவி என்பவர் இடம்பெறுகிறார். இவர் நினைவாற்றல் குறைந்தவர் என இப்னு முயீன் அம்ர் இப்னு அலி அபூசாஆ அலிஇப்னு மதனி அப்துல்லாஹ், இப்னு அஹ்மத் ஆகிய ஹதீஸ் கலை இமாம்கள் கூறுவதால் இந்த ஹதீஸ் பலமானதாக இல்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாருக்கேனும் சாதகமாக அல்லது பாதகமாக அல்லாஹ்விடம் துஆச் செய்ததைத்தான் குனூத் என மேற்கூறிய ஹதீஸில் கூறப்படுகிறது. ஆனால் ஒன்றை மட்டும் தெளிவாக விளங்க வேண்டும்: "அல்லாஹும்மஃதினீ" எனக்கூறப்பட்டு வரும் குனூத்தை ஸுபஹ் தொழுகையில் ஓதியதாக பலவீனமான ஒரு ஹதீஸ்கூட கிடையாது என்பது தெளிவானது.

மேலும், என் தந்தையே! நீங்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலி (ரலி), ஆகியோருக்குப் பின்னால் நின்று தொழுதிருக்கின்றீர்கள்: அவர்களெல்லாம் குனூத் ஓதுவார்களா? என நான் என் தந்தையிடம் கேட்டேன்: அதற்கவர் அது உருவாக்கப்பட்டதாகும் என்று பதில் அளித்தார். அறிவிப்பவர் அபூமாலிக் அஸ்ஜயீ, நூல்: திர்மிதி, இப்னு மாஜா. எனவே நபியும் ஸஹாபாக்களும் செய்யாத ஒன்று எப்படி நமக்கு இபாதத் ஆகும். அல்லாஹ் தனது அருள்மறையாம் திருமறையில் கூறும்போது "இன்று உங்களது மார்க்கத்தை நான் உங்களுக்கு பூர்த்தி செய்துவிட்டேன்" எனக் கூறியுள்ளான்.

எனவே அன்று மார்க்கம் இல்லாதது இன்று மார்க்கமாக முடியாது என்பதில் நாம் உறுதியாக நின்று அதன் பிரகாரம் எமது அமல் இபாதத்களை அமைத்துக் கொண்டால் ஈருலகிலும் நாம் வெற்றி பெற்றவர்களாவோம். அல்லாஹ் மிக அறிந்தவன்!

முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்

தொடர்புகளுக்கு:
விளம்பர முகாமையாளர்,

119/15, Viviyan Gunawardena Mawatha
(Kettampahuwa Road)
Wellampitiya.
Phone :071- 4105877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் போராட்டப்பாதை எது?

**இலங்கைத்** தாய் நாட்டில் சிறுபான்மையினராக வாழும் முஸ்லிம் சமூகம் அன்று தொட்டு இன்றுவரை சிங்கள பேரினவாதிகளாலும், தமிழ்ப் பயங்கரவாதிகளாலும் தமது உரிமைகள் மறுக்கப்பட்டும், உடமைகள் அழிக்கப்பட்டும், உயிர்கள் பறிக்கப்பட்டும் இன்றுவரை முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு போராட்டப் பாதையையும் அமைக்கவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். சிங்கள சக்திகளுடனோ, தமிழ்ச் சக்திகளுடனோ நாம் போராட வேண்டுமா? என்ற விடயம் ஒரு புறம் இருக்க எமது சமூகத்தைப் பாதுகாக்க ஓர் போராட்டப்பாதையை ஏற்படுத்தியிருக்க வேண்டியது முஸ்லிம்களாகிய எம் தார்மீகப் பொறுப்பாகும். எனவே முஸ்லிம்கள் பேரினவாதிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் எத்தனையோ கோரச்சம்பவங்கள் எம்மைக் கடந்து சென்றுவிட்டது. அதாவது குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லீம்களுக்கு புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட அநீதிகளையும், கொடூரமான செயல்களையும் நாம் மறந்துவிட முடியாது. நாம் இன்னும் கூட அநாதை பெற்ற பிள்ளைபோல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே இவ்வாறு நாம் சிந்தனையின்றி வாழ்ந்தோமேயானால் எமது நாளைய சந்ததியினருக்கு துரோகம் இழைத்து விட்டவர்களாவோம் என்பதை நாம் மறந்து விட முடியாது. ஆகவே எமது போராட்டம் ஆயுதத்தை மையமாகக் கொண்டதா, அகிம்சையை மையமாகக் கொண்டதா என்பது தற்காலத்து... ஒவ்வொரு முஸ்லிமுடைய உள்ளத்திலும் எழுகின்ற வினாக்களாகும். இந்தச் சூழ்நிலையில் நமது உரிமைகளை வென்றெடுக்க ஆயுதப் போராட்டம்தான் அவசியம் என்பது தூர திருஷ்டியானதல்ல. ஏனெனில் இன்று நாம் ஆயுதமேந்தி போராட நினைத்தால் சர்வதேசரீதியாக நாம் பல எதிர்ப்பலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதொரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவோம். இன்று உலகமே முஸ்லிம்களை பயங்கரவாதியாக சித்தரித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் நாமும் ஆயுதம் ஏந்த நினைத்தோமானால் சர்வதேச ரீதியாக நசுக்கப்படுவோம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

> ‘ வடக்குகிழக்கு முஸ்லீம்களுக்கு புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட அநீதிகளையும், கொடூரமான செயல்களையும் நாம் மறந்துவிட முடியாது. நாம் இன்னும் கூட அநாதை பெற்ற பிள்ளைபோல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ’



எனவேதான் எமது போராட்டத்தை அகிம்சை ரீதியாக கொண்டு செல்ல வேண்டுமே ஒழிய ஆயுத ரீதியாக அல்ல என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அதாவது ஓர் உருவத்தை வரைந்த பின்பே அதற்கு நிறம் தீட்ட வேண்டும் அன்றி உருவம் வரையாமல் அதற்கு நிறம் தீட்ட நினைக்கக்கூடாது. இன்று சர்வதேச ரீதியாகப் பார்ப்போமேயானால் பல நாடுகள் அகிம்சை வழியாக சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. உதாரணமாக 1947ம் ஆண்டு இந்தியாவானது காந்தியின் அகிம்சைப் போராட்டத்தின் ஊடாகவே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. எனவே நாமும் வெகுஜனப் போராட்டங்களை நடாத்த வேண்டும். அகிம்சை ரீதியாக ஒவ்வொரு விடயங்களையும் அடைய எத்தனிக்க வேண்டும். அதாவது புலிகள் கூட திடீரென ஆயுதம் மூலமாக போராட்டத்திற்கு முன்வரவில்லை. ஆரம்பத்தில் மேற்கொண்ட ஆயிரக்கணக்கான வெகுஜனப் போராட்டங்கள் மூலமாகத்தான் இன்று சர்வதேச ரீதியாக பேச்சு வார்த்தை மேடைகளில் உட்கார்ந்திருக்கின்றார்கள். இவ்வாறு நாம் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கின்ற பொழுது அகிம்சை ரீதியாகவே வெற்றிகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றது என்பது புலனாகும். எனவே முஸ்லிம் சமூகத்தின் நாளைய சந்ததியினர் விடுதலைப் பூக்களின் மேல் நடக்க வேண்டுமெனில் இப்போதே நாம் அகிம்சை என்கின்ற செடிகளை நட்டி பராமரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**இ. நளீம், மூதூர்**

# அல்-குர்ஆன் கூறும் சமூகம்!



**அல்-குர்ஆன்** மனித சமுதாயத்தைப் பற்றிக் கூறும்போது, "ஒரே ஆன்மாவிலிருந்து உங்களைப் படைத்தவன் அவனே. அவர் (முதல் மனிதர்) அமைதி பெறுவதற்காக அவரிலிருந்து அவரது மனைவியையும் படைத்தான்" (அல்-குர்ஆன் 7:189) என்று கூறி அல்லாஹ், மனித நேயத்தினை வலியுறுத்துகின்றான். மேலும் அவன் கூறும்போது, "விசுவாசிகள் (யாவரும்) சகோதரர்கள் தாம்; ஆதலால் உங்களில் இருசகோதரர்களுக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள்" (அல்-குர்ஆன் 49:10) என மனித சமுதாயத்திற்கு கட்டளை பிறப்பிக்கின்றான். இவை அனைத்தையும் நாம் நோக்குகிறபோது, சமூக அடிப்படையில் நாம் சுமுகமான உறவுகொண்டு மனித நேயத்துடன் பரஸ்பரம் ஒற்றுமையாகவும், விட்டுக்கொடுக்கின்ற மனப்பான்மையுள்ளவர்களாகவும், அடுத்தவரின் நலனில் அக்கறை காட்டுபவர்களாகவும் இருக்க வேண்டும். இதுவே சமூக அமைதிக்கு சிறந்த வழியாகும்.

அல்-குர்ஆனை மேலும் நாம் நோக்குகின்றபோது சமூக அமைதியை சீர்குலைக்கின்ற அனைத்து செயல்களுக்கும் இஸ்லாம் தடை விதித்துள்ளதையும் நாம் காணலாம். இந்த வகையில் அவதூறு, கொள்ளை, மது, விபச்சாரம், கொலை, திருட்டு, சூது, வன்முறை, வதந்தி மற்றும் இன, மொழி, நிறவேறுபாட்டையும் தீண்டாமையையும் அல்-குர்ஆன் தடுத்துள்ளதை நாம் காணலாம். இது பற்றி அல்-குர்ஆன் கூறுகையில்,

இன்னும் வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதும் உங்களது மொழிகளும் நிறங்களும் வெவ்வேறாக இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் நின்றும் உள்ளவை. திண்ணமாக, இவற்றில் உலகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன" (அல்-குர்ஆன் 30:22)

எனவே, அல்-குர்ஆன் கூறுகின்ற வழியில் நாம் அனைவரும் நடந்தோம் என்றால் எமது குடும்பத்திலோ சமூகத்திலோ பிரச்சினைகளோ பிரிவுகளோ ஏற்படமாட்டாது. நாம் அனைவரும் அல்-குர்ஆனின் பால் ஒன்றுபட்டு ஆரோக்கியமானதும் சுபீட்சமானதுமான ஒரு சமுதாயத்தினைக் கட்டி எழுப்புவோம்.

ஹம்மாது ஹலீம்தீன் மூக்கிரியாவ

## 2004ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் திருகோணமலைப் பிரதேச முஸ்லிம் பாடசாலைகளில் சித்தியடைந்த மாணவர்கள்!

**தி/ஸாஹிரா மகா வித்தியாலயம் திருகோணமலை**

| | |
|---|---|
| எம். முகம்மது தல்ஹா | - 158 புள்ளிகள் |
| ஜே. பாத்திமா சப்ரினா | - 143 புள்ளிகள் |
| கே. முகம்மது றஸ்மி | - 140 புள்ளிகள் |
| எம்.எச். சிம்தியா பானு | - 130 புள்ளிகள் |
| ஏ.ஜே. சப்னாஸ் | - 129 புள்ளிகள் |
| எம்.ஜே. பாத்திமா பஸ்மியா | - 129 புள்ளிகள் |
| ரீ. ஹரிஸ்னா | - 129 புள்ளிகள் |
| எம்.ஏ. அஸாம் | - 127 புள்ளிகள் |
| ஐ. முகம்மது சர்ஜுின் | - 126 புள்ளிகள் |
| எம்.எஸ்.தில்ஸாத் பானூ | - 125 புள்ளிகள் |

**தி/அல்-பத்தாஹ் மு.வி. நிலாவெளி**

| | |
|---|---|
| எம்.என்.நஸீஹா பானு | -141 புள்ளிகள் |
| ஏ.எம். சஹாத் | - 132 புள்ளிகள் |

**தி/அல்-ஹம்றா ம.வி. இறக்கக்கண்டி**

| | |
|---|---|
| ஏ.பாத்திமா சப்ரியா | - 132 புள்ளிகள் |
| எம்.ஏ. பாத்திமா ரக்ஸானா | - 127 புள்ளிகள் |

**தி/அல்-மின்ஹாஜ் ம.வி. மட்கோ**

| | |
|---|---|
| ஏ.எஸ். சனீர் அஹம்மட் | - 127 புள்ளிகள் |

தகவல் : மு.மு.மு. முஹைறஸ், திருகோணமலை செய்தியாளர்.




## முஸ்லிம்களின் முகம்!

முஸ்லிம்களின்
மனங்கவர்ந்த
முழுமதி போன்ற
முஸ்லிம் குரலே
முஸ்லிம்களுக்கென்றே
இப்பூவுலகில்
முத்தாய் நீ பிறந்தாயே
உன் அளப்பெரும்
புனித சேவை
என்னால் மட்டுமல்ல
அனைவராலும்
புகழ்ந்து போற்றப்படக்
கூடியதுதான்
உன் புகழ்
என்றென்றும்
தணியவே கூடாது
எனப்
பிரார்த்திக்கிறேன்.

ஏ.கே. பாத்திமா அபுஷ்றா (மதனி), தோப்பூர்

## தீரனின் குறுநாவல் நூலுருப் பெற வேண்டும்!

முஸ்லிம் குரலாவது வெளிவருகின்றது என்று ஆறுதல் படலாம் போல் உள்ளது. தீரனின் குறுநாவல் தொடர்ச்சி நன்றாக உள்ளது அது பல முக்கிய விடயங்களை பதிவு செய்து கொண்டு செல்கிறது, அக்குறுநாவல் நூல் வடிவம் பெற்று வெளிவருமெனின் தற்கால இலக்கியத்தில் ஒரு நல் வரவாக அமையுமென நினைக்கிறேன்.

பஹீமா ஜஹான் - மெல்சிரிபுர.

## பொத்துவிலில் சமாதானக் கருத்தரங்கு!

**ஒக்ஸ்போம்** நிறுவனத்தின் ஆதரவில் இயங்கும் பொத்துவில் சமாதான ஒன்றியத்தின் சமாதானக் கல்விக் கருத்தரங்கு சமாதான ஒன்றியக்கேட்போர் கூடத்தில் அண்மையில் அதன் தலைவர் ஏ. ஜெயசங்கர் தலைமையில் நடைபெற்றது. முஸ்லிம் மத்திய கல்லூரி, மெதடிஸ்மிசன் தமிழ் மகாவித்தியாலயம், சிங்கள மகாவித்தியாலயம் ஆகிய மூவின பாடசாலைகளில் இருந்தும் 30 மாணவ மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு கருத்தரங்கில் பங்குபற்றினர். மூவின மக்களிடையே சமாதானத்தை வலியுறுத்தும் அடிப்படையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

(அப்துல் மலிக், பொத்துவில் செய்தியாளர்)

## படிப்பாளிகள் கவனத்திற்கு!

1-55 இதழ்கள்
(பைண்டிங் தொகுப்பு) தேவைப்படுவோர்,
ரூபா. 1000-க்கான காசுக்கட்டளை/காசோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் மாதமே ரமழான்!

புனிதங்கள் பூத்துக் குலுங்கும் அருள் மிகு றமழான் மாதம் எம்மைவிட்டு கடந்துசெல்லும் தறுவாயில் உள்ளது; மனித குலத்துக்கு மறைவழி காட்டுகின்ற புண்ணியமிக்க இறைவனுடைய திருக் கலாம் இறக்கப்பட்ட மாதமே றமழானாகும். இம்மாதம் எல்லா மாதங்களை விடவும் சிறப்பானது. இந்த மாதத்தில்தான் மனிதர்களாகிய நாம் எம்முடைய ஆசாபாசங்களில் இருந்து தவிர்ந்து இறைவனுக்காக வேண்டி நல்லமல் செய்வதில் ஈடுபடல் வேண்டும். நோன்பு நோற்க வசதியற்றோர்களுக்கு இருப்பவர்கள் கொடுத்து உதவ வேண்டும். இந்தப் புனிதமான நோன்புகளைப் பற்றியும் அதற்குரிய மகத்தான கூலிபற்றியும் இறைவன் அல் குர்ஆனிலே கூறும் போது "ஈமான் கொண்ட முஃமீன்களே உங்கள் முன்னோர்களின் மீது எப்படி நோன்பு கடமையாக்கப்பட்டதோ அதே போன்று உங்களின் மீதும் நோன்பு கடமையாக் கப்பட்டுள்ளது." என்றும் இன்னும் 'நோன்பு எனக்குரியது அதற்குரிய நன்மைகளை நானே கொடுப்பேன்' என்றும் கூறியுள்ளான். ஆக நாம் பிறரிடத்தில் நோன்பு போன்று நடித்தாலும் இறைவனிடத்தில் இருந்து தப்பமுடியாது.

இந்த றமழான் மாதத்திலேயே நாம் அதிகமாக நன்மை செய்ய வேண்டும். ஏனென்றால் றமழான் மாதத்தில் யார் ஒரு சுன்னத்தை நிறைவேற்றுகின்றாரோ அவருக்கு றமழான் மாதமல்லாத மற்றைய மாதங்களில் நிறைவேற்றுகின்ற ஒரு பர்ழுடைய நன்மையும், ஒரு பர்ழை நிறைவேற்றினால் அந்த மாதத்தில் அவருக்கு அந்த பர்ழுடைய நன்மை 70 மடங்காகக் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இம்மாதத்தில் நாம் கூடுதலான அமல்களைச் செய்யவேண்டும்; தீய செயல்களில் இருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.



இந்த மாதத்தில்தான் முஸ்லிம்களுக்கு பல வெற்றிகள் கிடைத்தது. இந்த றமழான் மறுமை வெற்றியை மட்டுமன்றி உலக வெற்றிகள் பலவற்றையும் கண்ட மாதமாகும். முஸ்லிம்களை பூண்டோடு அழித்துவிட கங்கணம் கட்டிய 1000 காபிர்களை 313 சஹாபாக்கள் பத்ருக் களத்தல் சந்தித்தது இம்மாதத்தில்தான். அசத்தியத்தின் ஆணிவேரை ஆட்டம் காணச் செய்து பத்ர் வெற்றி கிட்டியதும் இம்மாதத்தில் தான். சத்தியம் வந்தது அசத்தியம் அழிந்தது என்ற முழக்கத்துடன் கஃபாவில் காணப்பட்ட சிலைகள் துகள் துகளாக்கப்பட்டதும், மக்கமா நகர் வெற்றி கொள்ளப்பட்டதும் இம்மாதத்தில்தான். அது மட்டுமன்றி இஸ்லாமிய உலகுக்கு எதிராக தொடுக்கப்பட்ட மிகப்பெரிய ஆயுதப் போராட்டமான சிலுவை யுத்தம் முறியடிக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டதும் இம்மாதத்தில்தான். இவ்வாறான பல வெற்றிகளைக் கண்ட றமழான் நம்மிடமிருந்து விடைபெறப்போகும் தறுவாயை அண்மித்து ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடவிருக்கிறோம். இந்நாளில் நாம் ஸகாதுல் பித்ரை கொடுத்து றமழான் மாதத்தின் வெற்றியை அடைந்துகொள்வோம்!

**எஸ். ஆஷிகா (மதனி), பாலத்தோப்பூர்**

## அமைச்சர் அதாவுல்லா 55 லட்சம் நிதி ஒதுக்கீடு!

**மூதூர்** பஸ் நிலையத்திற்காக பதினைந்து லட்சமும், தோப்பூரில் பால் சேகரிப்பு நிலையத்திற்காக முப்பது லட்சமும், மூதூர் அக்கரைச்சேனை றெஸீன் சனசமூக நிலையத்திற்காக ஏழு லட்சமும், மூதூர் கலாசார மண்டபத்திற்கு தளபாடம் மற்றும் உபகரணங்களுக்காக மூன்று லட்சமுமாக மொத்தம் ஐம்பத்தைந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அ.கா.மு. றிஸ்வின், மூதூர் - 01.

## கோரிக்கை...!



*இன்று... இலங்கையர் நாங்கள்..*
*கோழி கிழறி விட்ட குப்பை*
*போல்...*
*மரத்தடியிலும் முகாம்களிலும்...*
*வீசியடிக்கப்பட்டு கிடக்கோம் -*
*அகதியெனும்*
*புனைப் பெயருடன்...!!*

*ஏன்? எதற்காக நாங்கள்*
*எங்கள் உரிமைகளை..*
*உடமைகளை பிரிந்து...*
*இழந்து தவிக்க வேண்டும்...!!*

*இரண்டு*
*தசாப்த காலம் - நாங்கள்*
*சுதந்திர - மிழந்து!*
*சுற்றம் பிரிந்து பயந்து..*
*வாழ்ந்தது போதாதா..??*
*இனிமேலும் எங்களால்*
*அகதி வாழ்க்கை வாழ முடியாது..!!*

*அரசே...*
*இனியாவது மூவினத்தாரையும்...*
*சமாதானத்துடன் சம வாழ்க்கை*
*வாழ... வழி சமைத்து தாருங்கள்...!!*

கிண்ணியா.
ஜே. பிரோஸ்கான்.

## கிண்ணியாவின் கல்வித் துறையில் சாதனை படைத்த அதிபர் முஸ்தபா அவர்களுடனான சந்திப்பு.....






# என்னை ஏளனப் பார்வையோடுதான் ஆரம்பத்தில் நோக்கினர்!

*உங்களைப் பற்றிக் கூறுங்களேன்....?*

எனது முழுப்பெயர் அமீர் முஹம்மது முஸ்தபா; நான் 1931.04.17ந் திகதி பெரிய கிண்ணியாவில் சாதாரண குடும்பத்தில் பிறந்தேன். எனது ஆரம்பக் கல்வியை பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலையில் கற்ற நான் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று வந்தாறுமூலை முஸ்லிம் பாடசாலையிலும் கற்று பின்னர் SSC பரீட்சையிலும் சித்தி எய்தினேன்.

*உங்களது ஆசிரியர் தொழில் பற்றி கூறமுடியுமா?*

1952,53 காலப்பகுதிகளில் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் கற்று; 1954ம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று கிண்ணியா அல்-அக்ஸா வித்தியாலயத்தில் ஆறு வருடம் ஆசிரியராக கடமை புரிந்து பின்னர் 1960ம் ஆண்டு காலப்பகுதியில் புடவைக்கட்டு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆசிரியராக கடமை புரிந்துள்ளேன்.

*நீங்கள் பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய அனுபவம் பற்றி...?*

முதலாவது 1962ம் ஆண்டு மூதூர் கேணிக்காடு அரச முஸ்லிம் பாடசாலையில் அதிபராகவும், அதன் பின் 1963ம் ஆண்டு இறக்கக் கண்டி அரச முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஏழு ஆண்டுகள் அதிபராகவும்; பின்னர் கிண்ணியா மகாவித்தியாலய உப அதிபராகவும், கடமையாற்றினேன். அதன் பின்னர் கிண்ணியா அல்ஹிரா மகளிர் பாடசாலையை ஆரம்பித்தேன். பின்னர் வீழ்ச்சி அடைந்து கிடந்த மன்னார் மருட்சிக்கட்டு பாடசாலையில் கடமையாற்றி என்னால் முடிந்தளவு அதன் வளர்ச்சிக்கு உழைத்திருக்கிறேன்.

*நீங்கள் பாடசாலைகளில் அதிபராக இருந்த காலங்களில் எவ்வாறு பாடசாலைகளை முன்னேற்ற முடிந்தது?*

கிண்ணியா மகாவித்தியாலயத்தை நான் அதிபராக இருந்து மத்திய மகா வித்தியாலயமாக மாற்றியமைத்தேன். பின்னர் தி/ கிண்ணியா அல்-அக்ஸா வித்தியாலயத்தை மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தினேன். மற்றும் தி/ கிண்ணியா அல்-அக்ஸா மகா வித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரண தர. க.பொ.த.உயர்தர வகுப்புக்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஆரம்பித்து வைத்தேன்.

*கிண்ணியாவின் கல்வி வரலாற்றில் நீங்கள் அதிகம் பேசப்படுவதற்கான காரணம் என்ன?*

கிண்ணியாவின் கல்வி நிலை மிகவும் பின்தள்ளப்பட்டு இருந்தபோது தி/ கிண்ணியா அல்-அக்ஸா மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளை ஆரம்பித்து 11 மாணவர்களை எனது கண்காணிப்பின் கீழ் வைத்து இரவு, பகலாக கற்பித்து 11 மாணவர்களையுமே இறைவனது அருளால் பல்கலைக்கழகம் அனுப்பிவைக்க முடிந்தது. இதன் பெருமை என்னைச் சேர்ந்தது. மற்றும் தி/ கிண்ணியா மத்திய கல்லூரியில் 1978ம் ஆண்டு வெண்ணிற சீருடை அணிய வேண்டும் எனும் குறிக்கோளை மையமாக வைத்து வெண்ணிற சீருடை அணிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

*உங்களால் எவ்வாறு இவ்வாறான செயற்பாடுகளை செய்ய முடிந்தது? உங்களுக்கு ஏற்பட்ட சிரமங்கள், அல்லது சவால்கள் பற்றி சொல்வீர்களா?*

கிண்ணியாவின் கல்வி நிலை மிகவும் மோசமான நிலையில் பின்தள்ளப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு காணப்பட்ட காலப்பகுதியில் அப்போது நான் தி/ கிண்ணியா அல்-அக்ஸா மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமை புரிந்தேன். அப்போது நினைத்தேன் கிண்ணியாவின் கல்வி வளர்ச்சியில் ஏன் ஒரு திருப்பு முனையைக் கொண்டு வரமுடியாது என யோசித்து; தி/ கிண்ணியா அல்-அக்ஸா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பை 11 மாணவர்களைக் கொண்டே ஆரம்பித்து அவர்களுக்கு இரவு, பகலாக கற்பித்து பின்னர் இரவு நேரங்களில் பாடசாலைகளில் தங்க வைத்து தானும் ஒரு மாணவன் போல் பல சிரமங்கள், சவால்களுக்கு மத்தியில் பாடசாலையில் தங்கி படிப்பித்தேன். ஆரம்பத்தில் ஒரு சிலர் ஏளனப் பார்வையோடுதான் என்னை நோக்கினர்.

*உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி சொல்லுங்களேன்?*

தி/ கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியில் 1992ம் ஆண்டு வைரவிழாக் கொண்டாட்டத்தின் போது எனக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். பின்னர் 1983ல் வீதியில் வெள்ளை துணி விரித்து வீதியின் இரு மருங்கிலும் மாணவர்கள் மக்கள் நின்று வரவேற்று பாராட்டி விழா கொண்டா டப்பட்டு கௌரவிக்கப்பட்டேன். அத்தோடு. ஆசிரியர் தினங்களில் ஒவ்வொரு வருடமும் கௌரவிக்கப்பட்டு வருவது வழக்கம்.

*இறுதியாக நீங்கள் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?*

ஆசிரியர்கள் தங்களது கடமையை கண்ணியமாக மதித்து. தியாக உணர்வோடு செயலாற்றி. சிறந்த அணுகு முறைகளை மாணவர்களிடத்தில் கையாள வேண்டும். மேலதிக நேரம் எடுத்து மாணவர்களைப் பயிற்றுவித்தால் இன்னும் பல சாதனைகளை நிலைநாட்ட முடியும்.

**அ.மு.மு. றியாஸ்**
**நேர்காணல்: கிண்ணியா நிருபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்த உடையுடன் நாடு திரும்பினர்!

தொழில் தேடி மலேசியாவுக்குச் சென்று பல இன்னல்களுக்குப் பின் 87 பேர் நாடுதிரும்பியுள்ளனர். பொதிகளை சுமந்தபடி மகிழ்ச்சியுடன் புன்னகை பூத்த முகத்துடன் தாய்நாடு திரும்பும் விமானப் பயணிகளுக்கிடையில் UL 312 விமானத்தில் வெறுங்கையுடன் வந்து சேர்ந்த அந்த 87 பேரும் இருந்தனர்.



ஏனைய விமானப் பயணிகளின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை இவர்களினது முகங்களில் காணக் கிடைக்கவில்லை. இவர்களின் முகங்கள் வாடிப்போய் தோல்வியின் அடையாளமே தெரிந்தது. இவர்கள் அனைவரும் வெளிநாட்டு தொழில் முகவர்களினது பொறியில் சிக்கி வீடு வளவு. காணி பூமி மட்டுமன்றி நகை நட்டுகளையும் ஈடு வைத்து மலேசியா சென்றவர்களாவர். இவர்களுள் 57 பேர் தமது உறவினர்களால் பணம் சேர்த்து அனுப்பப்பட்டு இலங்கைக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் தெரியவந்துள்ளது. ஏனைய 33 பேருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலன்புரி அமைச்சின் உதவி கிடைத்திருந்தது. இந்த 87 பேரும் எப்படியேனும் தாய்நாடு திரும்பியிருப்பினும் இன்னும் 20.000 க்கும் அதிகமானோர் சம்பளமின்றி அடிமைகளாக மலேசியாவில் பணியாற்றுவதாக அறியக்கிடைக்கிறது.

## பெண் அரச துறை ஊழியர்களுக்கு பிரசவ விடுமுறை!

பெண் அரசதுறை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற பிரசவ விடுமுறை முறைமையானது மாற்றப்பட்டு ஒவ்வொரு பிரசவத்திற்கும் 84 நாட்கள் விடுமுறை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கு முன் முதல் 02 பிரசவத்திற்கு மட்டுமே 84 தினங்கள் விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த விடுமுறையானது நிரந்தர. அமய மற்றும் பயிற்சி அடிப்படையிலான ஊழியர்களுக்கும் உரிய சம்பளத்துடன் கூடிய விடுமுறையாகும். குழந்தை இறந்து பிறந்திருந்தால் அத்தகையோருக்கு 06 வார கால விடுமுறை வழங்கப்படும்.

84 நாள் விடுமுறையின் பின்னர் 06 மாத காலத்திற்கு நிறுவனத்திலிருந்து 01 மணித்தியாலத்திற்கு முன் வெளியேறுவதற்கும். கர்ப்பிணி காலத்தில் 05 மாதங்கள் கடந்ததும் 1/2 மணித்தியாலம் தாமதமாக வேலைக்கு சமூகமளிப்பதற்கும் அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈராக்கில் 400 தொன் வெடிமருந்துப் பொருட்கள் காணாமல் போயுள்ளன!




ஈராக்கிலிருந்து களவாடப்பட்டுள்ள வெடிமருந்துகள் காரணமாகவே தற்போது ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவம் தலைமையிலான கூட்டுப்படையினர் தொடர்ந்தும் தாக்குதலுக்குள்ளாகின்றனர் என்று ஐ.நா.வின் அணு முகவர் நிலையம் தெரிவித்துள்ளது. ஈராக்கின் பாதுகாப்பு பலவீனமுற்றிருப்பதன் காரணமாக ஈராக்கிய இராணுவத்தினருக்கு சொந்தமாக இருந்த 400 தொன் வெடி மருந்துப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோடு. தற்போது அமெரிக்கப்படைகளால் நிகழ்த்தப்படும் தாக்குதல்கள் அனைத்தும் அவற்றினைப் பயன்படுத்தியே நடாத்தப்படுவதாகவும் சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## குறுநாவல் — அத்தியாயம் 15

## பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

எஸ்.ஏ.கிரன் 44

முத்துமுகம்மது. நேராக லொட்ஜ் அதிபதியின் கூண்டுக்குச் சென்றான். அதிபதி சிரித்தான்... ஸலாம் சொன்னான்...
'ஜுல்தான்..? பள்ளிமுனே..?'
'ஓ.. மௌலானாதானே.. வாங்க.. மேலுக்கு ஈக்கி தொரே.. காம்பரா நம்பரு எட்டு.. போங்க..போங்க..'
வேகமாக படிகளில் ஏறினான்... மனம் விறைத்து விட்டது. பயம் அப்பியது.. மைம்னா..மைம்னா.. உணர்வு உந்தியது.. அறையை நெருங்கினான். எட்டாம் இலக்க அறை... பூட்டாமல் சாத்தியிருந்தது... உள்ளேயிருந்து வானொலி கேட்டது. வேகமாக கதவை நெருங்கினான். தட்டினான்... கூப்பிட்டான்..
'சுல்தான்...! தம்பி சுல்தான்...!'
'...................' – பதிலில்லை.
'தொற அரிண்ட! மம! மௌலானா..'
'...............................'
உள்ளே குளியலறைத் தண்ணீர் சத்தம் கேட்டது. ஓ....... குளிக்கிறான்.. மேலும் வசதியாக போய் விட்டது... பின்னால் திரும்பிப் பார்த்தான்.



யாருமில்லை. சட்டென கைப்பிடியை திருகித் திறந்தான். கதவு திறந்தது. உள்ளே நுழைய முன் தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தான். கொடியில் தாறுமாறாக ஆடைகள் தொங்கின... பெண்களின் உள்ளாடை.... சில சேலைகள்.. சேர்ட்டுக்கள்.. மேசை அலங்கோலம்... மரத்தடுப்புச் சுவரில் இஸ்லாம் கட்சித்தலைவர்...... நெஞ்சு துணுக்குற்றது.... முன்னறையில் யாருமில்லை. குளியலறை கதவில் துவாய் தொங்கியது...! உள்ளே நுழைந்தான்.. 'சுல்தான்' கூப்பிட்டான். பதில் வரவில்லை. திரும்பி கட்டிலைப் பார்த்தான்...... கட்டிலில் சரிந்து கிடந்தது சப்புச்சுல்தானின் உடல்.... கால்கள் அலங்கோலமாய் கிடந்தன... கை முதுகின் கீழே மடிந்திருந்தது. பனியன் சட்டையில் பச்சை இரத்தம் ஊறிப் பரவிக் கொண்டிருந்தது.

சாரம் உரியப்பட்டு இடுப்பின் கீழ் இரத்த வெள்ளம்.. தலைநிமிர்ந்து கண்கள் முண்டையகத் தள்ளி. வாயில்... ஈ..இ...தென்ன... வாயினுள்.. எ..ன்ட.. அல்லோ... வாயினுள் திணிக்கப்பட்டிருந்தது அவனது ஆண்.... என்டம்மோவ்..!

முத்துமுகம்மது நெஞ்சு திடுக்கிட்டான். பயத்தில் விதிர் விதிர்த்துப் போனான்... 'சட்' டெனத் திரும்பி கதவுக்கு ஓடினான்.. திறந்து வெளியே இழுத்து அடைத்தான்... யாரோ ஏணியில் ஏறி வந்தனர்... திரும்பினான்... ஏணியில் தாவி இறங்கினான்...
'ஙா. மௌலானா...போகவா..?'
'.......... ஓ....ம்.....!'

லொட்ஜ் அதிபதியில் மோதிச் சுதாகரித்து இரட்டைப்படிகளாக இறங்கினான்.. தரையை அடைந்து ஓடி நடந்தான். வீதியில் இறங்கி எதிரே வந்த. முச்சக்கரத்தை அடைந்தான் உள்ளேறி..
'யண்ட...யண்ட..' என்றான். ஓட்டோ சீறிப் பறந்தது. ஒன்றும் தெளிவாக.. இல்லை.. காட்சியின் பயங்கரம் உறைத்தது...
'கொஹத மஹத்தயா...?'
'மெத்தனய்... மஹத்தயா...?'
'மெத்தனய்... நவத்தன்ட...!'

இறங்கினான். பணம் கொடுத்தான்.. நடந்தான். சற்று நிதானித்தான்.. என்ன இடம் இது..ம். ஒலிம்பியா தியேட்டர்.. முக்கால் மார்புகள் காட்டி சிங்கள நடிகை... மனிதர்கள்... வாகனங்கள்.. மெதுவாக டீன்ஸ் வீதிக்கு நடந்தான்... தன் வாகனத்தை நெருங்கினான்.. திறந்தான்.. ஏறினான்.

(இன்னும் வரும்...)




முஸ்லிம் குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி. இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை. முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும். ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி இங்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.


241

முகம்மது றபீக் அன்வர். கோழிக்கடை வீதி. வாழைச்சேனை-05.
பிறந்த திகதி : 1979.03.17
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 27.06.2002ல் வாழைச்சேனை பிரதான வீதியில் எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகளினால் நிகழ்த்தப்பட்ட வன்முறையில் மரணம்
மரண அத்தாட்சிப்பத்திர இல: 2892


242

எம்.ஏ. ஹயாத்து முஹம்மட். பாடசாலை வீதி. காவத்தமுனை.
பிறந்த திகதி : 1960-10-20
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : 2002.06.27ல் வாகனேரிப்பகுதியில் வைத்து எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகளினால் கடத்தப்பட்டு மரணம் என ஊகிக்கப்படுகிறது.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 5243


243

பீர் மொஹமட் சாலி. 309 குடாபொகுன. மகாவலிசிங்கபுர. வெலிகந்தை
பிறந்த திகதி : 1978-08-25
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : 1996-08-29ல் குடாபொகுன கிராமத்தில் வைத்து எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகளினால் சுடப்பட்டு மரணம்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 1424


244

செய்யது முகமது முகமட் றிஸ்வி. பட்டானிச்சூர். புளியங்குளம், 3ம் ஒழுங்கை வவுனியா.
பிறந்த திகதி : 1975-01-22
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1992-06-14ல் பட்டானிச்சூர் புளியங்குளம் 4ம் ஒழுங்கையில் மோட்டார் குண்டு வெடித்ததினால் மரணம்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 6442

245

ஆதம் லெவ்வை பைக்கீர் முகைதீன், 166/A சின்னத்தோனா வீதி, காத்தான்குடி-01
பிறந்த திகதி : 1961-02-01
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1987.12.30ல் தமிழ்ப் பயங்கரவாதிகளினால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 1870



246

சுலைமா லெவ்வை முஹம்மது மன்சூர், றிம்ஸா மன்சில், பைசால் வீதி, புதிய காத்தான்குடி-03.
பிறந்த திகதி : 1963-02-04
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1990-07-12ல் குருக்கள் மடத்தில் வைத்து தமிழ்ப் பயங்கரவாதிகளினால் கடத்தப்பட்டு மரணம்
மரண அத்தாட்சிப்பத்திர இல: 696

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் ஆட்சிக் கதிரையில் மீண்டும் ஜோர்ஜ் புஷ்! முஸ்லிம்களுக்கெதிரான அமெரிக்காவின் யுத்தம் தீவிரமடைவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது!

**ஜோ**ர்ஜ் புஷ் 02வது தடவையாகவும் அமெரிக்காவின் ஜனாதிபதியானது எதிர்வரும் 04 வருடங்களில் உலகமானது அதிகரித்த யுத்த நெருக்கடியை சந்திப்பதற்கும் முஸ்லிம்களின் போராட்டம் உச்சகட்டத்தினை அடைவதற்கும் வாய்ப்புள்ளதாக மேற்குலக ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.



அமெரிக்காவில் கடந்த 02ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலினை முழு உலகமும் மிகவும் கரிசனையுடன் கவனித்து வந்தது. ஏனெனில், இத்தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டமையாகும். இந்தத் தேர்தலில் புஷ் தோல்வியினைத் தழுவிக் கொள்வாரென உலகிலுள்ள பல்வேறு தரப்பினரும், சர்வதேச ஊடகங்களும் ஹேஷ்யங்கள் கூறிக்கொண்டிருந்தபோது அவர் மீண்டும் நான்கு வருடங்களுக்கு 'உலகின் மகா பராக்கிரமசாலி'யாகும் ஆணையினைப் பெற்றுள்ளார்.

கடந்த 02ம் திகதி இரவு ஜனாதிபதி புஷ் தனது மனைவி, தனது இரட்டைப் பிள்ளைகளான மகள்மார், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான தனது தந்தை மற்றும் தாய் உட்பட, ஏனைய உறவினர்களுடன் வொஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் தனது வெற்றியினை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்.

1990ல் முதலாவது மத்திய கிழக்கு யுத்தத்தினை ஆரம்பித்து ஈராக்கினை ஆக்கிரமித்ததன் காரணமாக, 1992ல் பில் கிளின்டனுடன் போட்டியிட்டு தோல்வியினைத் தழுவினார் இவரது தந்தை. அதேபோன்று இவரும் 02 வது மத்தியகிழக்கு யுத்தத்தினை ஆரம்பித்ததன் காரணமாக கெரியிடம் தோல்வியடையலாம் என பல்வேறு ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துக்கொண்டிருந்தபோது; ஜனாதிபதி புஷ் தனது வெற்றியினை உறுதிப்படுத்தியதையிட்டு சர்வதேச ஊடகங்கள் தமது வியப்பினை தெரிவித்துள்ளன.

அமெரிக்காவில் வாழும் அமெரிக்க மக்களை பாதுகாப்பதே அமெரிக்க ஜனாதிபதியின் கடமையாகுமென்றும், அதனை தான் சரிவர நிறைவேற்றியுள்ளதாகவும் ஜனாதிபதி புஷ் தேர்தலுக்கு முன் பிரகடனப்படுத்தியிருந்தார். இந்தப் பிரகடனமானது புஷ்ஷினது வெற்றிக்கு உந்துசக்தியாக இருந்திருக்குமென இப்போது கருதப்படுகிறது.

எதிர்காலத்தில் இந்த வெற்றியின் மூலம் மத்திய கிழக்குப் பிரச்சினை மிக மோசமான நெருக்கடியை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக முஸ்லிம்களுக்கெதிரான அமெரிக்க நிர்வாகத்தின் போர்ப் பிரகடனம் அதிக வலிமையுடனும் வன்மத்துடனும் பிரயோகிக்கப்படுவதற்கான அமெரிக்க மக்களின் ஆணையே ஜோர்ஜ் புஷ்ஷின் வெற்றி எனச் சொல்லப்படுகிறது. ■

# பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி தயார்!



அரசாங்கம் மற்றும் புலிகளுக்கிடையில் சமாதானப் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக எழுந்துள்ள நெருக்குதலை முடிவுக்கு கொண்டுவரும் விதத்தில் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் அடிப்படையில் சமாதான பேச்சுவார்த்தையினை நடாத்துவதற்கு அரசாங்கமானது தயாரென ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் உத்தியோகபூர்வமாக புலிகளிடம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு செய்தித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த ஜப்பானிய விஷேட சமாதான தூதுவரான யசுஷி அகாஷி மூலமாகவே ஜனாதிபதி இந்த விஷேட செய்தியினை புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்

தான் ஜனாதிபதியின் விஷேட செய்தியொன்றினை புலிகளிடம் கொண்டு சென்றதாக அகாஷி தெரிவித்திருப்பினும்; அதைப் பற்றிய மேலதிக தகவலினை அவர் தெரிவிக்கவில்லை. கிளிநொச்சிக்குச் சென்ற அகாஷி ஜனாதிபதியின் செய்தியினை புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளரான தமிழ்ச் செல்வனிடம் வழங்கியபோது இவ்விடயமானது நோர்வே சமாதான தூதுவர்களின் ஊடாக தங்களுக்கு உத்தியோகபூர்வமாக தெரிவிக்கும் பட்சத்தில் இதற்கான பதில் தெரிவிக்கப்படும் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

**எதிர்வரும் 19ஆம் திகதி முஸ்லிம் குரல் வெளிவராது என்பதை எமது வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். 26ஆம் திகதியிலிருந்து வழமைபோல் வெளிவரும்...**

صوت المسلم
முஸ்லிம் குரல்
මුස්ලිම් කුරල් MUSLIM KURAL
'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

## முஸ்லிம்களை பாதிக்கும் எத்தகைய முயற்சிகளுக்கும் நமது தலைமைகள் துணை போகக்கூடாது!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள்; தனது பதவியின் ஆயுட்காலத்தை நீடிப்பதன் ஊடாக; இலங்கை அரசியலில் தனது அதிகார இருப்பினை உறுதிப்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா இந்த நாட்டில் ஜனாதிபதியாக இருப்பது முஸ்லிம் மக்களில் கணிசமானோருக்கு விருப்பமான தேர்வாக உள்ளது. மறைந்த மு.கா தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் காலத்திலிருந்து கணிசமான முஸ்லிம்கள் அவரை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்து வாக்களித்துள்ளனர். அவரது இரு பதவிக்காலத் தேர்தலின் போதும் கணிசமான முஸ்லிம்கள் சந்திரிகாவை ஆதரித்து வாக்களித்ததை ஜனாதிபதித் தரப்பும் நன்கு தெரிந்து வைத்துள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியாக ஒருவர் இரு பதவிக்காலத்திற்கு மேற் பதவி வகிக்க முடியாதென மட்டுப்பாடு உள்ளது. அவர் மூன்றாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அரசியலமைப்பு இடங்கொடுக்கவில்லை. இத்தகைய அரசியல் நெருக்கடியை ஜனாதிபதி எதிர்கொள்ள வேண்டியவராகி உள்ளார். ஏனெனில் அவர் மூன்றாவது முறையும் ஜனாதிபதிக்கான அதிகாரத்தை சுகிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளார். இதனை அவர் பகிரங்கமாகவும் வெளிப்படுத்தி வருகின்றார்.

ஆகவே அவரது விருப்பார்வத்தினை நடைமுறைப்படுத்துவதானால்; அரசியலமைப்பைத் திருத்த வேண்டி உள்ளது. இதற்கு அவருக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவைப்படுகிறது, இதனை எட்டுவதற்காகவே அவர் தனது அரசாங்கத்திற்கு வெளியில் உள்ள கட்சிகளையும், அதன் பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் என்ன விலை கொடுத்தாவது தனதுஅரசாங்கத்தில் இணைத்து வருகிறார்! ஆனாலும் அவரால் பாரளுமன்ற உறுப்பினர்களில் 150 பிரதிநிதிகளை (மூன்றில் இரண்டுப் பலம்) இந்த வகையில் திரட்ட முடியுமென்பது சாத்தியமற்றதொன்றாகும் என்பது வெள்ளிடைமலை.

இதனடிப்படையில்; சர்வஜன வாக்கெடுப்பின் மூலம்; பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவதற்கான வேலைத்திட்டத்தை அவர் முன்னெடுத்து வருகிறார். இத்தகைய அவரின் முயற்சி ஜனநாயகத்திற்கு எதிரான; அரசியலமைப்பை மீறும் ஒரு செயல் எனப் பலர் வலியுறுத்துகின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில்; ஜனாதிபதி முறைமை பாராளுமன்ற அதிகாரத்தைவிட பலவழியில் நன்மைமிக்கதாகவே உள்ளது. இந்த நாட்டின் அரசியல் நிலவரத்தின்படி ஜனாதிபதியாகத் தெரிவாக வாய்ப்புள்ளவர் சிறுபான்மை மக்களின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்றவராக இருப்பது தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதில் பிரதான பங்காற்றி வந்துள்ளது.

ஜனாதிபதி முறைமைய நீக்குவது மட்டுமின்றி, தொகுதி வாரிப் பிரதிநிதித்துவம்; தேர்தல் தொகுதி எல்லை மாற்றங்கள், பிரதிநிதித்துவக் குறைப்பு என பல்வேறு அரசியலமைப்புத் திருத்தங்களை செய்வதற்கு அவர் திட்டம் வைத்துள்ளார். இதனூடான சாதக, பாதகங்கள் பற்றிய விரிவான பார்வை நமது முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இன்றியமையாதவையாக உள்ளன.

வெறும் பட்டம், பதவி நலன்களுக்காக முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை காவு கொள்ளக் கொடுத்துவிடக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். ஏனெனில் எம்மிடம் உள்ள பலம் வாக்குகள் மட்டுமே! எம்மிடம் பீரங்கிகளும் இராணுவப்படையணிகளும் இல்லையென்பதை நாம் உணர்தல் வேண்டும்!

-தோழமையுடன் பிரதம ஆசிரியர்-


119/15, Vivian Gunawardene Mawatta,
(Kittampahuwa Road),
Wellampitiya. Phone: 071 4105877

## தோப்பூரில் கல்விக் கண்காட்சி!

**தோப்பூர்** 'யங்போய்ஸ்' விளையாட்டுக்கழகம் புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு எதிர்வரும் 15.11.2004 தொடக்கம் 18.11.2004 வரை 'போய்ஸ் இன் கல்விக் கண்காட்சி' ஒன்றினை தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடாத்தவுள்ளது. இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை பயன்பெறும் வகையில் பல்வேறு வகையான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (தகவல் : ஏ.எஸ்.எம். தாணீஸ்.)

◀ நீங்கள் புத்தகம், சஞ்சிகை, மலர் ஒன்றை வெளியிட விரும்புகிறீர்களா?
◀ அட்டைப்படமொன்றை வடிவமைக்க விரும்புகிறீர்களா?
◀ தமிழ், ஆங்கில, சிங்களத்தில் டைப்செட்டிங் செய்ய விரும்புகிறீர்களா?
◀ உங்கள் தேவையை நிறைவேற்ற நாங்கள் முன்வருகிறோம்!

பதிப்பு முயற்சியில் பல் வருட அனுபவம், தொழிற் தேர்ச்சி



தொடர்புகளுக்கு :
MUSLIM KURAL PUBLICATION AND PRINTERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 119/15, விவியன் குணவர்தன மாவத்த, வெல்லம்பிட்டிய, முஸ்லிம் குரல் பப்ளிகேஷனினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.